பக்கங்கள்-16 06,ஆனி.2021 விலை-30.00




# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -347



## இலங்கைக்கு பெரும் ஆபத்தாக மாறியுள்ள எம்.வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல்!

## இலங்கையை கடனுக்குள் சிக்கவைத்த சீனா நடப்பது என்ன?

## கொரோனா மூன்றாம் அலையில் சிக்கித் தவிக்கும் இலங்கை

# இலங்கைக்கு பெரும் ஆபத்தாக மாறியுள்ள எம்.வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல்!

கொரோனா கொடுமையானது தான் ஆனால் அதைவிட கொடுமையானது பிளாஸ்டிக்கை சாப்பாடென்று நினைத்து சாப்பிட்டு இறப்பது. நாம் மனிதர்கள் என்பதனால் பரவாயில்லை, நாம்செய்யும்பாவத்திற்குநாம்தண்டனையை அனுபவித்தேயாக வேண்டும். ஆனால் கடல் உயிரினங்கள் என்ன பாவம் செய்தது. வெறும் மூன்று மாதத்தில் சர்விஸிற்கு வந்த விடயம் இலங்கையின் கடற்கரை இன்று மூழ்கப்போகின்றது. அவ்வாறு மூழ்கினால் கொழும்புக்காக இருக்கட்டும் அல்லது நீர்கொழும்புக்காக இருக்கட்டும் இது மிகப்பெரும் துயரமாகும் இருக்கும். அந்த கப்பல் எவ்வாறு தீப்பற்றியது? இலங்கை அரசாங்கம் ஏன் அதற்கு சம்மதம் தெரிவித்தது? போன்ற பல கேள்விகளுக்கான பதிலாக இந்த பதிவு இருக்கப்போகின்றது.

இலங்கை கடலில் தீப்பற்றிய கப்பலினுடைய பெயர் எக்ஸ்பிரஸ் பேர்ல் ஆகும். இவ் எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலானது சிங்கப்பூரில் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட கப்பல். இந்த கப்பலுக்கு இன்சூரன்ஸ் லண்டனை சேர்ந்த பி.அன்ட்.ஐ என்ற நிறுவனத்தால் எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த கப்பல் கட்டார், இந்தியா, இலங்கை, அப்படியே சிங்கப்பூர் செல்வது தான் கப்பலினுடைய பயணம். கட்டாரிலே அந்த பயணம்தொடங்கியது. அந்தகப்பலின்மொத்த லெந்த் சுமார் 650 அடி இருக்கும் என்று சொல்கின்றனர். அதில் 1480 க்கும் மேற்பட்ட கன்டைனர்ஸ்களை ஏற்றி இருக்கிறது. இந்த கன்டைனர்ஸில் என்ன பொருட்கள் ஏற்றப்பட்டிருக்கின்றது என்று பார்த்தால் 25 டன் னைடிக்அசிட் உள்ளது. 25க்கும் மேற்பட்ட கன்டைனர்களில் பிளாஸ்டிக்கை தயாரிப்பதற்கான ராம் மெட்டீரியல் உள்ளது என்று சொல்லலாம். அதன் பின்னர் 350 மெற்றிக்ரன் அளவில் ஒயில் இருக்கின்றது இவ்வளவும் தானா என்று கேட்டால் கிடையாது எத்தனோல், லெக் இக்னோல்ஸ், காம்புல் டஸ்டன்சல்ஸ், டஸ்ட் யூரியா, பில்ட் யூரியா, எச்.டி.பி.ஈ, எல்.டி.பி.ஈ, பிலீனியர் எல்.டி.பி.ஈ, எபோக்சிஸ் ரசின்ஸ் இப்படி அனைத்து வகையான கெமிக்கல்களும் இருந்தன.

ஆகவே நிறைய கெமிக்கல் கன்டைனர்ஸ் இருக்கின்றது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். கட்டாரில் உள்ள துறைமுகத்திடம் இந்த கப்பலின் ஊழியர்கள் 25 பேர் இருந்தார்கள். இவர்கள் அனைவருமே சீனா, இந்தியா போன்று பல நாடுகளை சேர்ந்தவர்களாவர். அந்த ஊழியர்கள் **னைரிக்அசிட் கன்டைனரில் ஏதோ சின்னதாக லீக் தெரிகின்றது என்று சொல்லி கட்டார் துறைமுகத்திடம் கேட்டிருக்கிறார்கள்.** அப்பொழுது கட்டார் துறைமுகம் இந்த கப்பலை இந்த இடத்தில் நிறுத்தக்கூடாது வேறு எங்காவது எடுத்துக்கொண்டு போக சொல்லிவிட்டார்கள். நேராக அந்த கப்பலினுடைய லோடிங் அன்ட் அன்லோடிங் இந்தியாவினுடைய துறைமுகத்தில் வைத்து நடைபெற்றது. இந்திய துறைமுக அதிகாரி கலிடமும் இந்த கப்பலில் இருக்கின்றவர்கள் னைரிக்அசிட் கன்டைனரில் லீக் இருக்கின்றது உங்களால் சரிப்படுத்த முடியுமா? அல்லது இந்த கப்பலில் உள்ள இந்த கன்டைனரை மட்டும் எங்காவது வைக்க முடியுமா? என்று கேட்டிருக்கின்றார்கள். அப்பொழுது இந்தியாவினுடைய துறைமுக அதிகாரிகள் இதை சரிபடுத்தும் அளவிற்கு ஸ்பெசலிஸ்ட் இப்பொழுது இல்லை லொக்டவுன், கொரோனா வைரஸ் போன்ற இவ்வாறான பிரச்சனைகளுக்கு மத்தியில் இந்த கப்பலை இங்கு விட்டுவிட்டு அல்லது சரிப்படுத்துவது என்பது சரியாகபடவில்லை நீங்கள் அதை கொண்டுசெல்லுங்கள் என்று கூறிவிட்டார்கள். இது மே மாதம் 11 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவமாகும். அதாவது மே மாதம் 11ஆம் திகதி தொடங்கிய அவர்களது பயணம் மே மாதம் 18,19ஆம் திகதியில் இலங்கை கொழும்பு துறைமுகத்திற்கு கிட்டத்தட்ட 10 மைல் தூரத்தில் வந்துநிற்கின்றது. அப்படி நிற்கும் பொழுதே அந்த கப்பலை அங்கேயே நிறுத்திவிட்டு ஆங்கர் எல்லாம் போட்டுவிட்டனர். நங்கூரமும் பாய்ச்சிடுகின்றார்கள், நங்கூரத்தால் அந்த கப்பல் நின்றுகொண்டிருக்கும் பொழுது இலங்கை துறைமுக அதிகாரிகள் இதை பார்க்க வருகின்றனர். இதன் முன்னராகவே இலங்கை அரசாங்கத்திடம் இங்கிருக்கும் கப்பல் குரூமெம்பர்ஸ் எங்களுடைய கப்பலை உங்களுடைய கடற்பரப்பில் நிறுத்திக்கொள்ளலாமா? என்ற அனுமதியை கேட்கின்றார்கள். அதற்கு இலங்கை அரசாங்கமும் அனுமதி தந்துவிட்டது.

ஆகவே அனுமதி கிடைத்தது மட்டுமல்லாமல் 19 ஆம் திகதி அந்த கப்பலில் தீப்பற்ற ஆரம்பித்து விட்டது. இலங்கையினுடைய கடற்படையினர் அல்லது அங்கிருக்கும் லோக்கல் குரூஸ் அனைவருமே சேர்ந்து அந்த தீயை அனைக்க அனைத்து முயற்சிகளையும் செய்து பார்க்கின்றார்கள் தீ அனையவேயில்லை. வேறு வழியில்லாமல் பல நாடுகளிடம் உதவிகள் கேட்கப்படுகின்றது. இந்த கப்பல் எந்தளவு சூடாக இருக்கின்றது என்பதை அறிந்துகொள்ளும் கருவி நெதர்லாந்தில் இருந்து கொண்டுவரப்படுகின்றது. இந்தியாவிடம் இருந்தும் சில உதவிகள் கேட்கப்படுகின்றது. இந்தியாவும் அவர்களின் உதவிக்காக 4 கப்பலை அனுப்பி வைக்கின்றார்கள். UK யும் அவர்களின் கப்பலை அனுப்புகின்றது. இவ்வாறு பல நாடுகளும் உதவிகளை செய்துவரும் பொழுது இந்த தீயை அனைத்துவிடலாம் என்று அனைவரும் சேர்ந்து போராடுகின்றனர் ஆனாலும் தீயை அனைக்க முடியவில்லை.

இவ்வாறு13நாட்கள்தீஎரிந்துகொண்டிருக்கும் பொழுதே அதிலிருக்கும் சில கன்டைனர்ஸ் கடலுக்குள் விழ ஆரம்பிக்கின்றது. இந்த கன்டைனர்ஸ் அனைத்திலுமே பிளாஸ்டிக் ரோம் மெட்டீறியல்ஸ் இருந்தது. மைக்ரோ பிளாஸ்டிக்ஸ் சின்ன சின்ன Boll வடிவில் அதாவது உருண்டை வடிவிலுள்ள சின்ன சின்ன பிளாஸ்டிக்ஸ் மெட்டீறியல்ஸ். ரோ மெட்டீறியல்ஸ் கிட்டத்தட்ட 90 cm ஆழத்திற்கு கடற்கரையிலிருந்து கடல் இருக்கும் இடத்தை பார்த்தால் 90 cm க்கு இந்த ரோ மெட்டீறியல்ஸ் மட்டுமே இருந்ததாக அங்கிருக்கும் செய்திகள் சொல்கின்றன. அந்தளவுக்கு கடற்கரையோர பகுதிகளிலும் இந்த மைக்ரோ பிளாஸ்டிக்ஸ் ஆட்கொல்லுகின்றது. இது மட்டுமா? என்று கேட்டால் கிடையாது பல மீன்கள் செத்து மிதக்கவும் ஆரம்பிக்கிறது. இப்பொழுது சின்னதாக ஒரு பயம் வருகின்றது. அதாவது இந்த இடத்தில் ஒன்றிரண்டு கன்டைனர்ஸ்கள் கீழே விழுந்ததற்கே இவ்வளவு பெரிய ஆபத்து என்றால் அங்கிருக்கும் அசிட்டுக்கள் மற்றும் அந்த கப்பலில் இருக்கின்ற ஒயில் இவையெல்லாம் அந்த கடலில் கலந்துவிட்டால் கொழும்பு, நீர்கொழும்பு போன்ற பகுதிகளில் உள்ள பல மீனவர்கள் கிட்டத்தட்ட 4500 குடும்பங்கள் பாதிக்கப்படுவார்கள். அதுமட்டும் தானா, இல்லை அங்கு மட்டுமே இருக்கக்கூடிய ஆமை வகைகளாக இருக்கட்டும் மீன் இனங்களாக இருக்கட்டும் அனைத்தும் அழிவதற்கான வாய்ப்புக்கள் இருக்கும் என்று சொல்லி பலவிதமான போராட்டங்கள் நடைபெறுகின்றது.

ஆனால் இந்த போராட்டம் கை கொடுத்ததா? கிடையாது. ஏனென்றால் இந்த கப்பலை இழுத்துவிடலாமா? என்று கேட்கும் பொழுது இது எந்தளவுக்கு சூடா இருக்கிறது



அப்படி சூடாக இருக்கும் பொழுது கப்பலை இழுத்தால் அது இரண்டு மூன்றாக உடைந்துவிடுமோ என்ற கேள்விகளும் கேட்கப்பட்டது. ஆகவே கடைசி வரை அதை இழுக்காமல் கப்பலினுடைய தீ ஓயும் வரை அவர்கள் காத்திருந்தார்கள் அல்லது தீயை அணைப்பதற்காக முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். இன்று கப்பலினுடைய தீ முழுமையாக நின்றுவிட்டது இழுத்து ஆழ்கடலுக்குள் கொண்டுபோய்விடலாம் என்ற முடிவுக்கு வருகின்றார்கள். ஆனால் ஆழ் கடலுக்குள் கொண்டு போ-கலாம் என்ற முடிவுக்கு முன்னராகவே கப்பலினுடைய சில பகுதிகள் கொஞ்சம் கொஞ்சமாக நீரில் மூழ்க தொடங்குகின்றது. ஆகவே இப்படி மூழ்கிவிட்டால் நிச்சயமாக அதிலிருக்கும் ஒயில் வெளியில்வர ஆரம்பிக்கும். இவ்வளவு சம்பவங்கள் நடந்தபொழுதே "சில கன்டைனர்ஸ் கீழே விழுந்ததற்கே" 80 கிலோ மீற்றர் தூரத்திற்கு யாருமே மீன் பிடிக்க கூடாது என்று சொல்லிவிட்டார்கள். இந்திய பெருங்கடலுக்கு இது மிகப்பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் என்று சொல்கின்றார்கள்.

**நாம் சொல்வது பிளாஸ்டிக் தயாரிப்பதற்கான ரோ மெட்டீறியல் சின்ன சின்ன உருளைகள் என்று கூறினோம் இது அடுத்ததாக தண்ணீரில் கலந்து அது கொஞ்சம் கொஞ்சமாக பிரிய ஆரம்பிக்கும் கரைந்து போகாது மிகச் சிறிய பொருளாக மாறும். கண்ணுக்கு தெரியாத அல்லது கடுகு அளவிற்கு மாறும். இந்த பொருளை பார்க்கும் பொழுது மீன்கள் என்ன நினைக்கும் ஐயோ நமக்கு யாரோ உணவு கொடுக்கின்றார்கள் என்று நினைத்து அதை சாப்பிட ஆரம்பிக்கும். அப்படி சாப்பிட ஆரம்பிக்கும் பொழுது அந்த மீன்கள் இறக்க ஆரம்பிக்கலாம். அப்படி இறக்கும் பொழுது அல்லது இதை சாப்பிட்ட மீனை மனிதர்கள் உட்கொல்லும் பொழுது என்ன நடக்கும் என்பது தான் தற்பொழுது இருக்கும் பிரச்சனை. இலங்கை அரசாங்கம் இலங்கை மக்கள் இதுவரையிலும் காணாத மிகப்பெரும் பேரழிவாக இருக்கும் என்று சொல்கின்றனர். இந்த அழிவு அந்த கடற்பரப்பிலிருந்து கரையோரத்திலிருந்து நீங்குவதற்கு கிட்டத்தட்ட 10 – 20 வருடங்கள் பிடிக்கும் என்றும் சொல்கின்றார்கள். அந்தளவிற்கு நீர் மாசுபடும் என்பதிலும் மாற்றுக்கருத்தில்லை.**

அங்கிருந்த 25 குரூம் மெம்பர்ஸ்சையும் காப்பாற்றிவிட்டார்கள். அவர்களில் இரு நபர்களுக்கு மட்டும் சின்னதாக காயம் ஏற்பட்டிருக்கிறது. இவர்களில் யாரேனும் கொரோனா நோய்த்தொற்றுக்குள்ளாகி யிருக்கின்றார்களா? என்று பரிசோதித்து பார்த்தார்கள் அதில் ஒரிரு பேருக்கு மட்டும் அத் தொற்றானது உறுதியாகியுள்ளது. தற்பொழுது அந்த 25 நபர்களையும் ஆர்மியின் வைத்தியசாலையில் தங்க வைத்திருக்கிறார்கள். இப்பொழுது இலங்கை அரசாங்கத்திடம் கேட்க கூடிய கேள்விகள் என்னவென்றால். இரண்டு அரசாங்கங்கள் எங்களுக்கு னைட்ரிக் ஆசிட் லீக்கை சரிசெய்வதற்கான இஸ்பெசலிஸ்ட் யாருமே இல்லை என்று சொன்ன நாடுகள் இலங்கை மட்டும் எவ்வாறு சம்மதித்தார்கள்? என்பது தான்.

தற்பொழுது இலங்கை அரசாங்கமானது நாங்கள் வழக்குகளை தொடர்ந்திருக்கின்றோம் எப்படி இதிலிருந்து தீ வந்தது என்பதைவிசாரித்துக்கொள்கின்றோம் என சொல்லியிருக்கிறார்கள். தீ வந்ததே தெரியவில்லையா? என்ற கேள்விக்கு அதற்கான காரணத்தை சொல்கின்றார் இந்த கப்பலினுடைய உரிமையாளர் னைட்ரிக் அசிட்டில் தேவையில்லாமல் லீக் வந்ததனால் அதிலிருந்து தீ வந்திருக்கலாம் அல்லது அசிட்டை பாக் பன்னும் பொழுது சரியாக பாக் பன்னாமல் இருந்திருக்லாம் அல்லது வேறு சில அசிட் கூட கெமிக்கல் ரீயாக்சன்ஸ் செய்திருக்கலாம் அதன் வலியாக நெருப்பு வந்திருக்கலாம் என்று சொல்கின்றார். அந்த கப்பலை தற்பொழுது பார்க்கும் பொழுது முழுமையாக பாதிப்புக்குள்ளாகிவிட்டது என்பது மட்டும் தெளிவாக தெரிகின்றது.

ஆகவே இன்ஸ்சுரன்ஸ் கம்பனி "Total loss" என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் தற்பொழுது இன்சுரன்சானது இந்த கப்பலுக்கு மட்டும் கிளைம் பன்னப்படுமா அல்லது இங்கு ஏற்பட்டுள்ள கிளைமட் சேன்ஜ்க்கும் சேர்த்து கிளைம் பன்னப்படுமா? 100 பில்லியன் அமெரிக்க டொலர் கொடுத்தாலும் கூட தற்பொழுது இருக்கும் பிரச்சனைக்கு தீர்வாகாது என்று பல நபர்கள் கூறுகின்றார்கள். ஆனால் கப்பலினுடைய இன்சுரன்ஸ் கம்பனி சொல்கின்றது அந்த கப்பலில் இருந்த 25 நபர்களுக்கும் மற்றும் கப்பலினுடைய உரிமையாளருக்கும் மற்றும் அந்த நாட்டிற்கும் (இலங்கைக்கும்) மட்டுமே ஏதாவது கொடுக்க முடியும் அனைத்து விடயங்களையும் எங்களால் பார்க்க முடியாது என்று சொல்லுமளவிற்கு அவர்களுடைய பேச்சுவார்த்தை நீங்கிக்கொண்டு போகின்றது. இதில் இந்தியாக்கு எந்த பிரச்சனையுமே கிடையாதே என்று சாதாரணமாக நாங்கள் செல்லமுடியாது.

ஏனென்றால் இதை ஆழ்கடலுக்குள் கொண்டு போகப்போகின்றார்கள். ஆழ்கடலில் அந்த கப்பல் அப்படியே மூழ்கப்போகிறது. அதிலிருக்கும் மைக்ரோ பிளாஸ்டிக்ஸ், நாம் இங்கு பயன்படுத்தும் பிளாஸ்டிக்ஸ்ம் கடலில் தான் கலக்கின்றது இங்கு நேரடியாக மைக்ரோ பிளாஸ்டிக்ஸ்சாக அல்லது ரோ மெட்டீறியலாக கடலில் கலக்கின்றது. அவ்வாறு கலக்கும் அந்த பொருட்கள் மிகப்பெருமளவில் இந்தியா பெருங்கடல் முழுதுமாக பரந்து விரிவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

**11ஆம் பக்கம் பார்க்க...**

**விக்னேஸ்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## கொரோனா வைரஸினுடைய தாக்கம். நடக்கப்போவது என்ன?

இன்றைய கால சூழ்நிலையில் உலக மயமாக்கல் அரசியல் இடம் பெற்றுக்கொண்டிருக்கிறது. ஆயுதங்களினால் கொன்று சாதிக்க முடியாத சாதனைகளை இன்று சர்வதேச நாடுகள் மிக கச்சிதமாக கையாளுகின்றன. குறிப்பாக சீனா. இந்தியா. ரஷ்யா. ஈரான். துருக்கி போன்ற நாடுகள் அமெரிக்கா இஸ்ரேல் போன்ற நாடுகளின் சர்வதிகார கொள்கையை உடைத்தெறிய வேண்டும் என்பதில் முழு மூச்சாக செயற்படுகின்றார்கள். அதில் ஒரு நடவடிக்கையாகவே இந்த கொரோனா வைரஸினுடைய தாக்கத்தின் மறுபக்க வடிவம் செயற்படுகிறது.

அண்மையில் இடம்பெற்ற இஸ்ரேல் காசா யுத்தத்தின் பொழுதும் இஸ்ரேலை அடுத்தகட்டமாக அரபிலிக் நாடுகள் பலிவாங்கும் முனைப்புடன் செயற்படுகின்றார்கள். உலக வல்லரசான அமெரிக்காவை பொறுத்தவரையில் இஸ்ரேல் மீது போர் தொடுத்தால் அதனது முழு படைப்பலத்தையும் தரை இறக்கி போராடுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் சீன நாட்டின் கொரோனா வைரஸினுடைய இராஜதந்திர போர் நடவடிக்கைகள் இன்று உலகையே வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

சீனாவினுடைய சர்வதிகாரம் என்பது பொருளாதாரத்தின் ஊடாக ஒரு நாட்டுக்குள் திணிப்பது என்பதாகும். இது ஆயுத முனை குண்டு அல்ல. சர்வதேச பரம்பலில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தன்னையொரு வலுவான நாடாக மாற்றிக்கொள்வதற்கே கொரோனா வைரஸ் என்ற கொடிய வைரஸை உலக நாடுகள் முழுவதும் பரப்பியுள்ளது. இதனை தொடர்ந்து இலங்கை கடற்பரப்பில் கச்சைதீவையோ அல்லது இரணைதீவையோ இலங்கை அரசு சீனாவிற்கு தாரைவாக்குமாக இருந்தால் அது இந்தியா நாட்டுக்கு பெரும் ஆபத்தை தோற்றுவிக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தான் சீனாவை இலங்கையிலிருந்து அப் புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அமெரிக்காவும் இந்தியாவும் மேற்கொண்டுவருகின்றது. இன்றையகால சூழ்நிலைக்கேற்ப கச்சைதீவு சீனாவிடம் பறிபோகுமாக இருந்தால் சர்வதேச ரீதியாக பாரிய வெற்றியை தோற்றுவிக்கும்.

ஆகவே இலங்கை அரசானது சீனாவின் பிடிக்குள் இருந்து வெளியேற வேண்டிய தேவை இருக்கிறது. அவ்வாறு வெளியேறுவதன் ஊடாகவே ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் இருந்து இலங்கை நாடானது வளமான ஒரு நாடாக மாறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இலங்கையில் இடம்பெற்ற யுத்தமானது நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒரு பின்னடைவை ஏற்படுத்தினாலும் அந்நிய நாடுகளினுடைய தலையீடு இந்த நாட்டுக்குள் உட்புகாதவாறு இந்த நாட்டின் எல்லைக்காவளராக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் செயற்பட்டது. மீண்டும் ஆபத்தை நோக்கி இலங்கை அரசு சென்றுகொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில் சீன அரசிற்கு எதிரான ஒரு போரை முன்னெடுக்கும் சூழலுக்குள் இலங்கை அரசு தள்ளப்பட்டுள்ளது எனலாம்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**150**

அவதானிப்பு : இந்தக் குழு பிரதேச மக்களைப் போன்றும் எதிரியின் ஆதரவாளர்கள் (தரப்பினர்) போன்றும் உருமறைத்திருக்கலாம். அவர்கள் நடவடிக்கை நடைபெறவுள்ள வீதித் துண்டின் முன்னும் பின்னும் தொடர்ச்சியான அவதானிப்பை மேற்கொள்ள வேண்டும். அத்துடன், அவர்கள் கணிசமானளவு தூரத்திற்கு வீதியின் போக்குவரத்தைக் கட்டுப்பாட்டுக்குள்ளும் வைத்திருக்க வேண்டும்.

தாக்குதல் : இக்குழு சிறியரக ஆயுதத்தைக் கொண்ட சூட்டாளன் (சூட்டாளர்கள்), சாரதி (சாரதிகள்), கத்தி (குறுவாள்) போன்றவகை ஆயுதத்தைத் தரித்துள்ள போர்வீரன் (போர்வீரர்கள்) போன்றவர்களைக் கொண்டதாக இருக்கும்.

காப்பளித்தல் : இந்த உபகுழு பதுங்கித் தாக்குதல் நடைபெறவுள்ள இடத்திற்கு வருகின்ற பாதை களை அடைக்கின்ற பணியைக் கொண்டிருக்கின்றது. அத்துடன், வாகனம் கடந்து சென்றபின், எதிரியின் செயற்பாட்டுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும் அவனது நகர்வைத் தடுக்கும் வகையிலும் தடைகளையும் ஏற்படுத்துகின்றது. அவசியமேற்படும்போது, பதுங்கித் தாக்குதல் குழு பின்வாங்கிச் செல்வதற்காகச் சூட்டுக் காப்பும் அளிக்கின்றது.

பதுங்கித் தாக்குதலிலிருந்தவாறு வீதியில் நகர்கின்ற எதிரிகள் மீதான கெரில்லாக்களின் தாக்குதல்கள் மிக வினைத்திறன் கொண்டவையாகும். ஆனால், இங்கே தெரிந்திருக்க வேண்டிய விடயம் யாதெனில், எதிரி பொறிகளை ஏற்படுத்தியிருப்பான். அதாவது, வீதிக்குச் சிறப்பாகத் தயார்ப்படுத்தப்பட்ட வீரமிக்க கட்டளையாளனுடன் ஆட்களை அனுப்புவான். எதிரியின் இவ்வாறான படைப்பிரிவு வேகமாகச் சமர் நடவடிக்கையில் இறங்குவதுடன், கொடூரமான எதிர்ப்பையும் வெளிக்காட்டுகின்றது.

பதுங்கித் தாக்குதலுக்கு ஒழுங்குபடுத்துகையில், அவசியம் மூன்று குழுக்களைத் தயார்ப்படுத்த வேண்டும். ஒரு குழு எதிரியை முன்பக்கத்தில் மறிக்கின்றது. இரண்டாவது குழு-பக்கவாட்டிலிருந்து (பக்கவாட்டுக்களிலிருந்து) தாக்குதலைத் தொடுக்கின்றது. மூன்றாவது –சேமப்படை.

பதுங்கித் தாக்குதலுக்காகச் சில ஆட்கள் நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் எவருக்கும் தெரியாமல், பிரதேச மக்களைப் போல் வீதியைக் கண்காணிப்பார்கள். அவர்கள் எதிரியின் வேவுக்காரர்களைக் கண்டு கொண்டாலும், வேவுக்காரர்கள் பதுங்கித் தாக்குதல் நடக்கவுள்ள இடத்தைக் கண்டறியும் சந்தர்ப்பத்தைக் கொடுக்க மாட்டார்கள். எதிரியின் வாகனத்தொடரணிநெருங்கிவந்ததும் முன்னணி, பக்கவாட்டுக் குழுக்களால் பலமான அடி கொடுக்கப்படுகின்றது. வாகனங்கள், கவசவாகனங்கள், ராங்கிகள் போன்றன எரியூட்டப்படும் நிலைக்குத் தள்ளப்படும்வரை



தாக்குதல் தொடரப்பட வேண்டும். இவ்வாறான பதுங்கித் தாக்குதல்களை மலைப்பாங்கான பிரதேசத்தில் மேற்கொள்வது மிகவும் வசதியான தாகும். அதுவும் குறிப்பாக ஒடுக்கமான இடங்களிலாகும். இங்கு கணிசமான தாக்குதலை எதிரியின் காலாட்படை மீது மாத்திரமன்றி, அவனது வாகனங்கள் மீதும் மேற்கொள்ளலாம். கணவாய்கள், ஏனைய குறுகலான இடங்கள் போன்றவற்றில் தூரத்தில் இருந்தவாறே எதிரியைத் தாக்கலாம்.

பதுங்கித்தாக்குதல்நடவடிக்கைக்கான கட்டளையாளன் நடவடிக்கை நடைபெறவுள்ள வீதித் துண்டைத் தீயிடுவதற்காக வீரர்கள் குழுவை நியமிக்கின்றான். இதற்காக அவர்கள் வைக்கோல்களையும் உலர்ந்த புற்களையும் தயார்ப்படுத்துகின்றார்கள். பதுங்கித் தாக்குதல் நிலையிலிருந்து தாக்குதலைத் தொடுக்கும்போது, எரியூட்டுவதற்குத் தயார்ப்படுத்தப்பட்ட பொருட்களைக் கொழுத்தி எதிரிமீது எறியவேண்டும். மிகவும் முக்கியமானது யாதெனில், முன்னுக்குச் செல்கின்ற வாகனத்தைப் பின்வருமாறும் தடுத்து நிறுத்தலாம். வீதியில் மரத்தைத்தறித்து விழுத்தி, அதனுடன் கண்ணிவெடியை இணைத்துவிடுதலாகும். பதுங்கித் தாக்குகின்ற சமர் திகைப்புத் தாக்குதலாகவும் குறுகியதாகவும் பலம்மிக்கதாகவும் இருக்க வேண்டும். பணி நிறைவேற்றப்பட்டபின், நிலைகளிலிருந்து பதுங்கித் தாக்குதல் அணி தன்னை விடுவித்து, மறைவான பாதைகளால் தமது தளத்திற்குத் திரும்புகின்றது.

திடீர்த்தாக்குதலிற்குத் (திகைப்புத் தாக்குதலிற்குத்) தயார்ப்படுத்தல்

வழக்கமாகக் கெரில்லாக்கள் எதிரிமீது திகைப்புத் தாக்குதல்களைத் தொடுக்க வேண்டும்.

இவ்வாறான தாக்குதலிற்குத் தயார்ப்படுத்துவதற்காகக் கவனமாக எடுக்கப்பட்ட சராசரியான வேவு, எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு எதிரியின் ஆளணி பற்றிய பூரண அறிவு, அவனது அமைவிடத்தினதும் நிலைகளினதும் தகவல்கள் போன்றன அவசியமாகும்.

ஐபனாக்குலோர் மூலம் அவதானித்தல், எதிரியிடம் அல்லது அவனுக்கு அருகிலுள்ள இடத்திற்கு வேலையாட்கள், ஆடுமேய்ப்பவர்கள் போன்றவர்களைப் போல வேவுகாரர்களை அனுப்புதல் போன்றவற்றினால் எதிரியைப் பற்றி ஆராயலாம். பின்னர் திட்டவரைபடத்தின்படி அல்லது வரைபடத்தின்படி நடவடிக்கை நோக்கங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. நடவடிக்கைத் திட்டம் (வரைபு) உருவாக்கப்படுகின்றது. இத்திட்டங்கள் குழுக் கட்டளையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. அவைஒவ்வொரு கட்டளையாளனைப் பொறுத்த வரையில் இலகுவானதாகவும் விளங்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

நடவடிக்கைக்காகக் குழு மூன்று உப குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றது:

தாக்குதல் உபகுழு: இந்த உபகுழுவினுள் கூடுதலான அளவு படைகளும் படைக்கலன்களும் உள்ளடக்கப்படுகின்றன.

தகர்பாளர் உபகுழு: இக் குழு சிறிய அளவு எண்ணிக்கையில் நிபுணர்களையும் உதவி வேலை செய்கின்ற வீரர்களையும் கொண்டிருக்கும்.

சேமப்படை உபகுழு: எதிரிக்கு அவனது உதவிப்படை உதவ வருகின்ற தருணத்தில் இந்த உபகுழு சமரிடத் தொடங்குகின்றது. இக்குழுவின் நிலைகள் (தங்கியிருக்கின்ற இடங்கள்) எந்த நிலைமையிலும் எதிரிக்குத் தெரியக்கூடாது. பிரதான உபகுழுவும் இரண்டாவது உபகுழுவும் பின்வாங்கிச் செல்கின்றபோது, சேமப்படை உபகுழு அவர்களின் பின்வாங்கலுக்குக் காப்பளிக்கின்றது.

தனது தீர்மானத்தைக் கட்டளையாளன் மாற்றிக்கொள்ளக்கூடாது. சேமப்படைக் குழுவிற்குத் தகர்ப்பு வேலை நிபுணர்கள் அல்லது ஆதரவளிக்கின்ற படைப்பிரிவைச் சேர்ந்த கெரில்லாக்கள் மாத்திரமே உதவி செய்யலாம். சகல உபகுழுக்களும் தமது ஆரம்பத் தங்கல் நிலையில் திறந்த நிலையெடுப்புடன் இருப்பார்கள். ஆனால், அவதானிப்பையும் பகல் நேர ஓய்வையும் ஒழுங்குபடுத்தியிருப்பார்கள். இருள் சூழ்ந்ததும் சகல உபகுழுக்களும் தமது நிலைக்குச் சென்று, சமருக்குத் தயார்நிலையில் இருப்பார்கள். தாக்குதலைத் தொடுப்பதற்கேற்ற மிகப் பொருத்தமான நேரம் இரவு தொடங்கி 1-2 மணித்தியாலங்களின் பின்னராகும்.

**நெற்றிபொறியன்**

**தொடர்வான்...**

# இலங்கையை கடனுக்குள் சிக்க வைத்த சீனா! நடப்பது என்ன?

இன்றைய சமகால பார்வையிலே அரசியல் என்று கூறும் பொழுது கொரோனா வைரஸை தாங்கியதான ஒரு அரசியல் சூழலாக இன்றைய சமகால அரசியலிலே இடம்பிடித்திருக்கின்றது. அந்த வகையில் பார்க்கின்ற பொழுது இருக்கின்ற 200 நாடுகளிலே இந்த வைரஸினுடைய தாக்கம் அதிகரித்து செல்வதனால் குறிப்பாக நாங்கள் அடுத்த நாடுகளை விடவும் எங்களுடைய நாட்டிலே நாங்கள் கவனம் செலுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கின்றது. கொரோனா வைரஸினுடைய தாக்கம் என்பது பொருளாதார ரீதியிலே ஒரு நாட்டை முடக்குவதற்கான அல்லது ஒரு வீற்றோபவர் கொண்ட நாடாக தன்னை சீனா உயர்த்துவதற்கான ஒரு திட்டமிட்ட நகர்வாகத்தான் இதனை காண முடிகின்றது.

ஆசிய பசுபிக் பிராந்தியத்திலே பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த சீன அரசு பயோஜ்ஜிக் ஊடாக பல நடவடிக்கைகளை செய்யமுடியும் என்ற அடுத்தகட்ட நகர்வை நகர்த்துவதற்காக ஒரு பரீட்சாத்தியமான நடவடிக்கையாகத்தான் கொரோனா வைரஸ் என்ற ஒன்றை இந்த நாடு முழுதும் பரப்பியிருக்கின்றது. அந்தடிப்படையில் பார்க்கின்ற பொழுது இன்று கொரோனா வைரஸிற்குரிய தடுப்பூசிகள். வென்டிலேட்டர்கள். முகக்கவசங்கள் என்பவற்றை சீனாவே பல கம்பனிகளை நிறுவி அதனை விற்பனை செய்துவருகின்றது. இவர்களின் தேவை அனைத்தும் தங்களுடைய நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்துவது ஒன்று ஏனைய நாடுகளை தன்னுடைய அதிகாரத்திற்குள் கொண்டுவருவது இரண்டாவது விடயம். இவ்வாறு கொண்டுவருகின்றபொழுது பொருளாதார ரீதியாக இலங்கை முற்றுமுழுதாக தற்பொழுது பாதிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் கடன் சுமையை கொடுத்து மென்மேலும் இலங்கையில் இருக்கின்ற அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பில் இருக்கின்ற போர்ட்சிற்றி போன்ற இரண்டு பகுதிகளையும் தன்வசப்படுத்தியிருக்கின்றது.

அதுபோன்று நிதி வளங்களை கொடுத்து கடன் சுமையை அவர்கள் மீது திணித்து கடன் சுமையினால் இலங்கை மீள முடியாத அளவிலே தற்பொழுது இலங்கையை உள்ளாக்கியிருக்கிறது. இதனடிப்படையில் ஆசிய பசுபிக் பிராந்தியத்திலே அமெரிக்கா இந்தியா போன்ற அண்டைய நாடான இந்தியா இன்று இலங்கைக்குள் சீனா நுழைந்திருப்பது தனக்கு பேராபத்தாக நினைக்கின்றது. அதுபோன்று அமெரிக்கா சீனா இந்த நாட்டுக்குள் நுழைந்திருப்பது பாரிய அழிவினை கொண்டுவரும் என்ற நிலைப்பாட்டிலே தற்பொழுது அவர்கள் இரகசியமாக சீனாவை இலங்கையில் இருந்து எவ்வாறு அப்புறப்படுத்துவது அல்லது அவர்களை எவ்வாறு இந்த இடத்திலிருந்து அகற்றுவது போன்ற விடயங்களில் அவர்கள் ஈடுபட்டுக்கொண்டு வருகின்றார்கள்.

ஒருவேளை இதுவொரு ஆயுத தளமாக அல்லது ஒரு இரகசிய துப்பரியும் தளமாக இந்த போர்ட்சிற்றி அமையப்பெறலாம். அமைந்திருக்கிறது என்றுதான் அவர்கள் கருதுகின்றார்கள். ஆகவே இதனை எவ்வாறு அப்புறப்படுத்த வேண்டும் என்பது பற்றியும் இலங்கை சிந்திக்க வேண்டும். நாளடைவில் இதுவொரு சீன காலனியாக இலங்கை மாறக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றது. அண்மையில் சீனர்களை இலங்கையர்கள் திருமணம் செய்யக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. இரட்டை குடியுரிமையை பெறுவதற்கு அடுத்தக்கட்ட வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஒரு சீன இராஜ்யமே இந்த இடத்தில் உருவாக வாய்ப்புக்கள் இருக்கின்றன. குறிப்பாக வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை இந்த நாட்டிலே 30 ஆண்டுகள் போரிட்ட எமது சொந்த நாட்டில் இருக்கக்கூடிய எமது மக்களுக்கு வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை கொடுக்க முடியாது என்ற சூழல் உருவாகும் இந்த கட்டத்திலே அதற்காக தமிழர்களும் சிங்களவர்களும் போரிட்டு இதிலே பல்லாயிரக்கணக்கானோர் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்த நாட்டிலே ஒரு இனப்படுகொலை கூட இடம்பெற்றிருக்கின்றது. மண் மீட்கும் போரிலே பல்லாயிரக்கணக்கான போராளிகள் தமது உயிரை விட்டிருக்கின்றார்கள். இவ்வாறிருக்கின்ற பொழுது இன்னுமொரு நாடுஎங்களுடைய நாட்டை ஆக்கிரமிப்பதற்கு நாம் இலங்கையில் இருக்கின்ற இலங்கையர்கள் என்ற வகையிலே நாங்கள் அதற்கு அனுமதி வழங்கக்கூடாது என்பதிலே மாற்றுக்கருத்தில்லை.

ஆகவே சீன நாட்டை இலங்கையில் இருந்து அடித்து விரட்டுவதற்கான முழு மூச்சுடன் இந்த சிங்களவர்களும் முஸ்லிம்களும் தமிழர்களும் செயற்பட வேண்டிய தேவை மற்றும் அந்த காலகட்டம் தற்பொழுது ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே சீனர்களை பொறுத்தவரையிலும் அவர்கள் தாங்கள் ஒரு தொழினுட்ப ரீதியில் தங்களை வளப்படுத்திக்கொண்டு எமது இலங்கை திருநாட்டை ஒரு குட்டிச்சுவராக்கி அதனூடாக இலங்கை ஒரு கட்டத்திலே அடிமைப்பட்ட நாடாக மாறும் என்பதிலே மாற்றுக்கருத்தில்லை. அப்படித்தான் எத்தனையோ நாடுகளை இதுவரையிலே ஒரு அடிமைத்தனமாக வைத்திருக்கிறார்கள். இலங்கையினுடைய முழு பொருளாதாரத்தையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும் என்பதற்காக ஒரு பரீட்சித்தமான ஒரு நடவடிக்கை தான் இது. தற்பொழுது பார்க்கும் பொழுது செய்மதியினூடாகத்தான் அனைத்து தொழினுட்பமும்




தற்பொழுது இயங்கிக்கொண்டிருக்கின்றன.

செய்மதி நிறுத்தப்பட்டால் இந்த தொலைத்தொடர்பு சாதனங்கள் உட்பட அனைத்தும் நிறுத்தப்படும் சூழல் உருவாகும். அடுத்தக்கட்ட நடவடிக்கையாக ஒவ்வொரு நாட்டினுடைய செய்மதிகளை உடைப்பதற்கான நகர்வுகளை தான் சீன அரசு அடுத்தகட்ட வைரஸ் தாக்குதலை இங்கு நிறுத்தப்போகிறது. அப்படி செய்யும் பொழுது சீனாவினுடைய செய்மதி மட்டும் இயங்கக்கூடியதான சூழல் உருவாக்கப்படும் பொழுது ஒவ்வொரு நாடுகளினதும் தொழினுட்பங்களை தாம் சுவீகரித்துக்கொண்டு அங்கே போவதற்கான எந்தவொரு இன்டலியன்ட் நடவடிக்கைகளையும் செய்ய முடியாத சூழல் உருவாகும். இதை ஒரு பரீட்சாத்தியமாக கொரோனா வைரஸை சகல நாடுகளுக்கும் பரப்பி இந்த நாடு வெற்றிகண்டிருக்கின்றது. சீன அரசுடன் மோதினால் வைரஸை கொண்டு இனி தாக்குதலை நடத்தும் என்ற நிலைப்பாடு தற்பொழுது இருக்கின்றது. அமெரிக்காவை ஒருபோதும் போரியல் ரீதியாக ஆயுத ரீதியாக அவர்களை வெல்ல முடியாது என்றவொரு நிலைப்பாடு இருக்க அந்த வெல்லமுடியாத நிலைப்பாடு அவ்வாறு இருக்கும் பொழுதே அடுத்தகட்ட நகர்வை பரீட்சித்தமாக செய்து அதில் வெற்றியும் கண்டுள்ளது. அதுபோன்று இன்று வீற்றோபவர் கொண்ட நாடுகளாக இருக்கின்ற ஒவ்வொன்றும் பெரும் பதற்றத்தில் இருக்கின்றார்கள்.

ஆகவே இதற்கான ஒரு முற்றுப்புள்ளியை வைக்க வேண்டும். குறிப்பாக சீன நாட்டுக்கான எல்லைகளை மூட வேண்டும். வான் பரப்பை தடை செய்ய வேண்டும். சீனாவினுடைய அனைத்து நட்புறவையும் நிறுத்த வேண்டும். அனைத்து நாடுகளுமே சீன தூதரகங்களை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இவ்வாறு எடுக்கும் பொழுது மட்டும் தான் சீனாவினுடைய தலையீடு குறித்த நாடுகளில் இல்லாமல் அந்த நாடுகள் உருப்படியாவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றது.

உதாரணமாக தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்திலே இந்த ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் இருக்கின்ற எந்தவொரு நாட்டையுமே இலங்கைக்குள் நுழையவிடாது பாதுகாத்தவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் தான். அதிலே மாற்றுக்கருத்தில்லை. அதுபோன்று சீனா அரசு தான் வைரஸை பரப்பி மக்களை கொன்றது என்ற விடயமும் பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்ட விடயமும் தெரியும். இவ்வாறு தெரிந்திருக்க மீண்டும் அவர்களுடன் தொடர்பை கொண்டிருப்பது என்பது உண்மையில் ஏற்றுக்கொள்ளமுடியாதது ஒன்று. இதை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும். இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழப்பதற்கு கொரோனா வைரஸை பரப்பிய சீனாவுடன் மீண்டுமொரு பொருளாதார ரீதியில் கையை கோர்த்துக்கொண்டு இருப்பது என்பது வேடிக்கையான விடயம்.இலங்கையிலே நல்ல மருத்துவங்கள் இருக்கின்றன அந்த மருத்துவத்தை பயன்படுத்தி கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்கான நிலைப்பாடுகளை நாம் எடுக்க வேண்டுமே தவிர சீனாவின் மருத்துவத்தையும். தடுப்பூசிகளையும் உலகத்தில் இருக்கும் அனைத்து மக்களுக்கும் செலுத்தி அதனூடாக ஒரு நெட்வேர்க்கை உருவாக்கலாம் என்று பார்க்கின்றார்கள்.

ஆகவே உடனடியாக நாங்கள் எங்களுக்கான மாத்திரைகளை கண்டுபிடிக்கும் வகையிலே செயற்பட வேண்டும். நாங்கள் எவ்வாறு அதனை கண்டுபிடித்து நடைமுறைப்படுத்தினால் காலகாலமாக கொரோனா வைரஸை ஒழிக்க முடியும் என்ற ஒரு நடவடிக்கையை நாங்கள் நிச்சயமாக மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு மேற்கொள்வதால் மட்டும் தான் நாங்கள் எங்களுக்கான சரியானதொரு இலக்கை அடையமுடியும். அல்லது போனால் சீனா தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி உலகத்தில் வாழுகின்ற அனைவருக்கும் ஒரு நெருக்கடியை கொடுக்கப்போகின்றது.

ஒரு அரசியல் ரீதியான காய் நகர்த்தல்களை சீனா மீது வல்லரசுகள் போர் தொடுக்க போகின்ற சூழல் தான் தற்பொழுது உருவாக்கப்பட்டிருக்கின்றது. இந்த போர்ட்சிற்றி என்பது சாதாரணமாக அவர்கள் ஒரு வியாபாரத்தை செய்து அவர்கள் வெளியேறுவதற்காக அல்ல இது உலக சந்தையிலே முதன்மைத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. ஆசிய பசுபிக் பிராந்தியத்திலே அனைத்து கொன்ரோல் மையமாக இது அமையப்போகின்றது.

ஏனென்றால் உலக போர் நடந்தால் இலங்கை எவ்வாறு அனைத்து நாட்டுக்கும் ஒரு பயனுள்ளதாக இருக்கும் என்ற நடவடிக்கை இருக்கின்றது. ஆகவே இலங்கைத்தீவை ஜப்பான் அமெரிக்கா போன்ற நாடுகள் சீனாவினுடைய ஆதிக்கம் இருக்கின்றது என்று கூறி இலங்கை தீவை முற்றாக அணுகுண்டை போட்டு அழிக்கவும் வாய்ப்புக்கள் இருக்கின்றது. இலங்கை மீது கோபம் கொண்ட பல நாடுகள் செய்யக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

ஆகவே ஒரு விடயத்தை புரிந்துகொண்டு சீன அரசாங்கத்தினுடைய பொறிக்குள் இருந்து எம்மை பாதுகாத்துக்கொள்ளவதற்காக. சீனாவினுடைய அனைத்து வர்த்தகங்களையும் துண்டிப்பதனூடாக இலங்கை அரசு வருங்காலத்திலே ஒரு சுபீட்சமான நாடாக திகழும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. எனவே சீன அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும்.



**இரணியன்**

# சமூக ஊடகங்கள் சாபமா, வரமா?

ஆதி மனிதன் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளவும் தகவல்களை பரிமாறவும் பயன்படுத்திய 'பறை' ஒலியே இந்த உலகின் முதல் ஊடகமாகும். பின்பு புறாவில் தூது. ஒற்றர்கள் மூலம் செய்தி. அஞ்சல் மூலம் தகவல். தொலைபேசி வழி என கற்காலம் தொடங்கி கணினி காலமான இன்று வரை சமூக ஊடகத்தின் பரிணாமவளர்ச்சி பல கட்டங்களை கடந்து அசாத்திய முன்னேற்றம் பெற்றுள்ளது.

அன்றாட வாழ்வில் இருந்து பிரிக்க இயலாது வாழ்வின் அங்கமாகி விட்டன தகவல் ஊடகங்கள். இந்த நிலையில் சமூக ஊடகங்களின் வளர்ச்சியும் தாக்கமும் வரமா,சாபமா என்ற கேள்வி அனுதினமும் பேசுபொருளாகிவிட்டது.

உலகத்தின் எந்த மூலையில் உள்ள மனிதனும் தன்னுடைய கருத்துகளை பரிமாறிக் கொள்ள இந்த சமூக ஊடகங்கள் ஏதுவாகின்றன. அண்டை வீட்டு அளவிலும். தெரு நட்புகள் அளவிலும். பாடசாலை மற்றும் கல்லூரி. பணியிடங்கள் அளவிலும் மட்டுமே இருந்து வந்த நம் நட்பு வட்டாரங்கள் இன்று இந்த சமூக ஊடகங்களின் வாயிலாக பரந்து விரிந்து உலகம் முழுவதும் தன் நட்பின் பாசவலைகளை வீசியிருக்கின்றது. உலகில் நடக்கும் நிகழ்வுகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளவும், நமது வினாக்களுக்கும் விடையளிக்கும் அறிவு களஞ்சியமாகவும் திகழ்வது சமூக ஊடகங்கள் ஆகும்.

பேஸ்புக், டுவிட்டர், இன்டர்கிரம், வட்ஸ்அப் போன்ற முன்னோடி சமூக ஊடக தளங்களின் மூலமாக இளைஞர்களின் சிறப்பான பல ஆக்கங்களுக்கு அங்கீகாரம் மிக எளிதாக கிடைக்கின்றது. இந்த தளங்களின் மூலம் இளைஞர்களின் உள்ளார்ந்த திறமைகள் வெளிக்கொணரப்படுவது மட்டுமல்லாமல் அவர்களுக்கு உலகளாவிய நட்பு வட்டாரங்களால் இடப்படும் குறியீடுகள் மற்றும் விமர்சனங்கள் போன்றவற்றால் ஊக்கம் அளிக்கப்படுகிறது.

பல தவறான முன்னுதாரணங்களையும் தாண்டி இன்று ஒரு தகவல், தெரிந்து கொள்வோம் போன்ற சமூக ஊடகதள பக்கங்கள் சிறப்பான சேவையாற்றி வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். எனினும் இன்றைய சமூகத்தினர் உலகத்தின் அசைவுகளை விரல் நுனியில் அசைபோட, சமூக ஊடக தளங்களின் வீரியமிக்க பயன்பாடு பெரிதும் உதவி புரிகின்றது.

உலக மாற்றத்திற்கேற்ப மாறி வரும் மனிதர்கள் மத்தியில் தொழில்நுட்பத்தின் தாக்கம் புதிய பரிணாமத்தை தந்துள்ளதோடு அவை சார்ந்த சாதக, பாதக விடயங்களையும் அவ்வப்போது மேற்கொண்டு வருகின்றன. கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், பொழுதுபோக்கு, அரசியல் மற்றும் இதர விடயங்களின் தளமாக சமூக ஊடகங்கள் இன்று பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றை எவ்விதத்திலும் கட்டுப்படுத்த முடியாத நிலையே காணப்படுகின்து. இவற்றைப்பயன்படுத்தும் ஒவ்வொரு நபரும் சுயபாதுகாப்பையும் சமூக இருப்பையும் தக்கவைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

'காலம் பொன் போன்றது' என்பார்கள். அவ்வாறு விலைமதிக்க முடியாத நேரங்களை சமூக வலைத்தளங்களில் கணக்கின்றி செலவழிக்கும் நம் இளைய சமுதாயம் மைதான விளையாட்டுக்களையும், இயற்கையை ரசிக்கும் தன்மையையும் அடியோடு மறந்து விட்டது. எட்டு வயதுக்கும் குறைவான நம் எதிர்கால தூண்கள் கூட தினமும் இந்த சமூக வலைத்தளங்களில் வீழ்ந்து கிடப்பது கொடுமை. சமூக வலைத்தளங்களின் தாக்கத்தால் மனதளவில் அடிமைகளாக சிக்கித் தவிக்கும் இளைஞர்களின் மனநிலை மற்றும் உடல் கூறுகளின் பாதிப்புகள் அதிகமாவதாக மனோதத்துவ நிபுணர்களும், நரம்பியல் வல்லுனர்களும் ஒரு அதிர்ச்சி தகவலை அண்மையில் வெளியிட்டுள்ளனர்.

அதாவது சமூக ஊடகங்களில் தரம் குறைந்த, முதிர்ச்சியற்ற அவசர விமர்சனங்கள், கருத்துப் பதிவுகள் அமெரிக்கா தொடங்கி உள்நாடு வரை வீசப்படுகின்றன. குறிப்பாக சமூக வலைத்தளங்களின் ஆதிக்கம் மூலைமுடுக்குகளை ஊடுருவி இருப்பதால் இதன் தேவை அதிகரித்துக் காணப்படுகின்றது. தங்களை அடையாளப்படுத்துவதற்காக ஒவ்வொருவரும் சமூக வலைத்தளங்களின் அங்கத்தவர்களாக இருப்பதற்கே விரும்புகின்றனர். ஆண், பெண் அடிப்படையிலும் வயது அடிப்படையிலும் தாராளமாக சமூக வலையத்தளங்களை பாவிப்பது அதன் வேகமான ஆதிக்கத்தை வெளிக்காட்டுகின்றது.

சமூக ஊடகங்கள் மனிதரின் நேரத்தை களவாடியது ஒருபுறம் என்றால் அதை விட மக்களிடையே இருந்து உணர்வுபூர்வமான பிணைப்பை கொன்று வருகின்றன என்பது வேதனைக்குரிய விடயமாகும். 'தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் அமெரிக்கா பக்கத்து வீடானது. பக்கத்து வீடு அமெரிக்காவானது' என்றோ எங்கோ படித்த கவிதைதான் ஞாபகத்திற்கு வருகின்றது. தேடித் தேடி வாழ்த்து அட்டைகள் வாங்கி, நேரில்சென்று, உளமார வாழ்த்தி அன்பைப் பகிர்ந்து கொண்ட தருணங்கள் மாறி, தன் சொந்த வீட்டில் இருப்பவர்களுக்கு கூட சமூக வலைத்தளங்கள் வாயிலாக வாழ்த்துக்களைஜீவனின்றிபகிர்கின்றோம். இறந்த நண்பனுக்கு இரங்கல் செய்தி பதிவிட்டு அடுத்த வேலையை நோக்கிச் செல்லும் அவலம் அரங்கேறி வருகின்றது. அந்த இறந்த நண்பரின் வீட்டிற்கு செல்லவோ, அவரின் தாய், தந்தைக்கு ஆறுதல் கூறி தேற்றவோ எண்ணம் எழாத அளவிற்கு சமூக வலைத்தளங்களின் ஆதிக்கம் நீள்கிறது.

100 வருட சினிமா வரலாற்றின் தலை எழுத்தையும் மாற்றி எழுதிக் கொண்டிருக்கின்றது சமூக ஊடகங்களின் வளர்ச்சி. வாய்ப்புத் தேடி அலைகின்ற திறமையுள்ள கூட்டம் தங்கள் குறும்படப் படைப்புகளை யூடியூபில் பதிவேற்றி நேரடியாக மக்கள் மன்றத்தில் இடம்பிடிக்கிறது.

எட்ட இருப்பினும் முகத்தோடு முகம் பார்த்து பேசும் அதிசயங்களை இவை தருகின்றன. உலகத்தின் எந்த மூலையில் இருக்கும் நண்பர்கள், உறவுகளுடன் தொடர்பில் இருக்கவும் புத்தகம் கையில் எடுக்காத இளைஞர்களும் நொடிக்கு நொடி உலகின் அசைவுகளை விளங்கிக் கொள்ள முடிகிறது. இதன் பயன்கள் எல்லையற்றவை.

எது எவ்வாறு இருந்தபோதிலும் சமூக ஊடகத்தளங்களினால் தீமைகள் இருந்தாலும் மறுக்க முடியாத பல நன்மைகளும் உள்ளன. ஒட்டுமொத்தமாக சகலதரப்பினர் மத்தியிலும் இதன் ஆதிக்கம் விரைவாக பரவி வருகின்றது.

ஆகவே முறையான விதத்தில் கையாள்வதின் ஊடாக சிறந்த பலனைப் பெற முடியும். சமூக ஊடகங்களின் தீமையை மட்டுமே கண்டு ஒதுங்கக் கூடாது. எந்த ஒரு புதுமையிலும் நாணயத்தின் இருபக்கம் போல நன்மை, தீமை இரண்டும் சேர்ந்தே இருக்கும். சமூக வலைத்தளங்கள் அவரவர் பயன்படுத்தும் விதத்தினைப் பொறுத்து அதன் ஆதிக்க விளைவுகளை கண்டு கொள்ள முடியும்.



# யாழ் நூலகம் எரிக்கப்பட்டு 40 ஆண்டுகள் நிறைவு
# தமிழர்களின் வரலாற்றுப் பொக்கிஷம் ஏன் அழிக்கப்பட்டது?

உலகில் வேறு எங்கும் இல்லாத நூற்றாண்டு பழமை வாய்ந்த ஓலைச்சுவடிகள், நூல்கள், வரலாற்று ஆவணங்கள், 1800-களில் யாழ்ப்பாணத்தில் வெளியான பல பத்திரிகைகளின் மூலப் பிரதிகள் என மிகப் பெரிய எண்ணிக்கையிலான பொக்கிஷங்களை யாழ்ப்பாண நூலகம் தன்னகத்தே கொண்டிருந்தது.

தமிழ் இனத்தின் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாகத் திகழ்ந்த இலங்கையின் யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த 'பொதுசன நூலகம்', சிங்களப் பேரினவாதிகளால் திட்டமிட்டு எரிக்கப்பட்டு 40 ஆண்டுகள் ஆகின்றன.

இலங்கையின் முதலாவது மாவட்ட சபைத் தேர்தல்கள் 1981-ம் ஜூன் 4 அன்று நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கையின் பல இடங்களிலிருந்து காவல்துறையினர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

1981 மே 31 அன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் நடந்துகொண்டிருந்த போது, அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதைத் தொடர்ந்து அங்கு வன்முறை வெடித்தது. அன்றிரவு யாழ்ப்பாணத்தின் பிரபல வணிக நிறுவனங்கள், கடைகள் என அனைத்தும் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

அன்று கொளுத்தப்பட்ட வன்முறைத் தீ மறுநாளும் கொழுந்துவிட்டு எரிந்தது ஜூன் ஒன்றாம் தேதி இரவு யாழ்ப்பாணத்திலிருந்த ஈழநாடு தினசரி அலுவலகமும், அதற்கு அருகிலிருந்த கடைகள் பலவும் தீயிட்டு கொளுத்தப்பட்டன. அன்று முழுவதும் நிலவிய பதற்றச் சூழலை இந்தச் சம்பவம் மேலும் தீவிரப்படுத்தியது அதைத் தொடர்ந்துதான் அந்த வரலாற்றுக் கொடுமை அரங்கேறியது. ஆம், சிங்களப் பேரினவாத கும்பல் ஒன்று யாழ்ப்பாண பொதுசன நூலகத்தைத் திட்டமிட்டு கொளுத்தியது. தமிழ்ப் பண்பாட்டின் ஒரு பகுதி திரும்பப் பெற முடியாத வகையில் எரிந்து சாம்பலாகிப் போனது.

இருபதாம் நூற்றாண்டின் இன, பண்பாட்டு அழிப்புகளில் ஒரு மிகப்பெரும் வன்முறையாகக் கருதப்படும் யாழ்ப்பாண நூலக எரிப்பு நடந்து இன்றோடு 40 ஆண்டுகள் ஆகின்றன!

## தொடக்கம்

1930-களில் யாழ்ப்பாணத்தின் முக்கியப் பிரமுகர்களில் ஒருவராகத் திகழ்ந்த கே.எம்.செல்லப்பாவின் மனதில் உதித்த எண்ணம்தான் யாழ்ப்பாண பொது நூலகத்துக்கான அடிப்படை. தன்னுடைய சொந்த சேகரிப்பிலிருந்த நூல்களையும், பத்திரிகைகளையும் கொண்டு, 1933-ல் வாடகை நூலகம் ஒன்றை தன்னுடைய வீட்டிலிருந்தே தொடங்கிய செல்லப்பா, அதை அடுத்த கட்டத்துக்குக் கொண்டுசெல்ல விரும்பினார்.

அதைத் தொடர்ந்து நகரின் மற்ற முக்கியப் பிரமுகர்களின் ஆலோசனையின் பேரில், 1934 ஆகஸ்ட் 1 அன்று யாழ்ப்பாண பொது மருத்துவமனை சாலையில் வாடகை அறை ஒன்றில் 844 நூல்கள் மற்றும் 36 பருவ வெளியீடுகளுடன் யாழ்ப்பாண பொதுசன நூலகம் தொடங்கப்பட்டது ஒருகட்டத்தில் இங்கு இட நெருக்கடி ஏற்படவே, 1936-ல் நகரக் கட்டடம் அமைந்துள்ள டவுன் ஹாலுக்கு அருகே நூலகம் மாற்றப்பட்டது.

தொடங்கப்பட்ட தினத்திலிருந்தே நூலகம் மிக வேகமாக வளரத் தொடங்கியது. பாதிரியார்கள் லோங், டேவிட் உள்ளிட்ட யாழ்ப்பாணச் சமூகத்தின் முக்கியப் பிரமுகர்கள், கல்வியாளர்கள் எனப் பல தரப்பினரும் நூலகத்துக்கான நிரந்தமான நவீனக் கட்டடம் ஒன்றை உருவாக்க முயன்றனர். கட்டடக் கலைஞர் வி.எம். நரசிம்மன் கட்டிடத்தை வடிவமைத்துக் கொடுக்க, யாழ் நூலகம் சர்வதேசத் தரத்தை எட்டுவதற்கான ஆலோசனைகளை இந்திய நூலகர் எஸ்.ஆர். ரங்கநாதன் வழங்கினார். 1953-ல் நூலகத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டு, திராவிடக் கட்டடக் கலையில் அமைந்த புதிய நூலகக் கட்டடம் 1959 ஒக்டோபர் 11 அன்று திறக்கப்பட்டு செயல்பாட்டுக்கு வந்தது. அப்போது யாழ்ப்பாணத்தின் மேயராக இருந்த ஆல்ஃபிரட் துரையப்பா நூலகத்தைத் திறந்துவைத்தார்.

நூலகத்தில் குழந்தைகளுக்கான பகுதி 1967-ல் தொடங்கப்பட்டது உரைகள், கருத்தரங்கங்கள், பண்பாட்டு நிகழ்வுகள் ஆகியவற்றை ஒருங்கிணைப்பதற்காக நிகழ்வரங்கம் ஒன்று 1971-ல் திறக்கப்பட்டது. உலகம் முழுவதும் தனி நபர்கள், அயல் தூதரகங்கள், தொண்டு நிறுவனங்கள் மூலம் புத்தகங்கள் ஆயிரக்கணக்கில் குவியத் தொடங்கின் நூலகக் குழுவும் அரிய நூல்களைச் சேகரிக்கத் தொடங்கியது.

உலகில் வேறு எங்கும் இல்லாத நூற்றாண்டு பழமை வாய்ந்த ஓலைச்சுவடிகள், நூல்கள், வரலாற்று ஆவணங்கள், 1800-களில் யாழ்ப்பாணத்தில் வெளியான பத்திரிகைகளின் மூலப் பிரதிகள் என மிகப் பெரிய எண்ணிக்கையிலான பொக்கிஷ ங்களை யாழ்ப்பாண நூலகம் தன்னகத்தே கொண்டிருந்தது யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும்தனிப்பட்டவர்களிடமும்இருந்து வந்த பல நூல்கள், குறிப்பாக நூற்றாண்டுகள் பழமையான ஓலைச்சுவடிகள் போன்றவை இங்குப் பத்திரப்படுத்தப்பட்டிருந்தன.


1585-ல் கத்தோலிக்க மதத் தலைவர்களால் தமிழில் எழுதப்பட நூல்கள், கண்டி சிறையிலிருந்தபோது ராபர்ட் க்னாஸ் எழுதிய **'History of Ceylon'** நூலின் பிரதி, முதலியார் ராசநாயகத்தின் 'பண்டைய யாழ்ப்பாணம்', தமிழின் முதல் இலக்கியக் கலைக்களஞ்சியமான முத்துத் தம்பிப் பிள்ளையின் 'அபிதான கோசம்', சிங்காரவேலு முதலியார் தொகுத்த 'அபிதான சிந்தாமணி' ஆகியவற்றின் பிரதிகள், சித்த வைத்திய ஓலைச்சுவடிகள் போன்ற எண்ணிடலங்காதவை இந் நூலகத்தின் சேகரிப்புகளாக விளங்கின.

சுமார் 97,000 அரிய நூல்களுடன் தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய நூலகங்களில் ஒன்றாகத் திகழ்ந்த யாழ்ப்பாண பொது நூலகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அறிவுச் சமூகத்தால் வெகுவாகப் பயன்படுத்தப்பட்டுப் போற்றப்பட்டது அதை விட முக்கியமாகத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு வெளியாக யாழ் நூலகம் விளங்கியது.

இத்தகைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, ஓர் இனத்தின் பண்பாட்டு அடையாளமாகத் திகழ்ந்த நூலகத்தைத்தான் சிங்களப் பேரினவாதிகள் திட்டமிட்டு அழித்தனர். யாழ்ப்பாணம் நூலக எரிப்பு என்பது ஒரு தனி சம்பவமல்ல அது இலங்கைத் தமிழர் பிரச்னையின், தமிழர்களை உளவியல் ரீதியாக அடுத்த கட்டத்துக்கு நகர்த்திய ஒரு வரலாற்று நிகழ்வு!

## எரியும் நினைவுகள்

தமிழர் பண்பாட்டு வரலாற்றின் துயரங்களில் ஒன்றான யாழ் நூலக எரிப்பு பற்றிய 'எரியும்நினைவுகள்' என்றஆவணப்படத்தை எடுத்த ஈழத் தமிழரான சோமிதரன், நூலகம் எரிக்கப்படுவதற்கு 19 நாட்களுக்கு முன்பு பிறந்தவர். தன்னுடைய பத்து வயதிலேயே முதல்முறையாக இதுபற்றி அறிய நேர்ந்த சோமிதரன், ஓர் ஊடகவியலாளராக உருவாகி யாழ்ப்பாண நூலக எரிப்பு பற்றிய ஆவணப்படத்தை பல்வேறு இடர்களுக்கு மத்தியில் எடுத்து முடித்தார்.



"1991-ல் யாழ்ப்பாணக் கோட்டையை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். அப்போது கோட்டையில் துப்புரவுப் பணிக்காக உயர்நிலைப் பள்ளியளவில் இருந்த மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அப்போது யாழ்ப்பாணத்தில் பொருளாதாரத் தடை இருந்ததால், பெட்ரோல் டீசல் எதுவுமின்றி வாகனங்கள் ஓடவில்லை. புலிகளின் தேவைக்காக மட்டும் மண்ணெண்ணெய் கொண்டு சில வாகனங்கள் இயக்கப்பட்டன. அப்படியான ஒரு பேருந்து மாணவர்களை அழைத்துச் செல்ல வந்தபோது, என்ன ஏதென்று அறியாமல் பேருந்தில் பயணிக்கும் ஆசையில் நானும் என் நண்பனும் ஏறிக் கொண்டோம்.

நாங்கள் கோட்டைக்குள் சென்றோம். நாங்கள் அப்போது சிறுவர்களாக இருந்ததால் எங்களைத் துப்புரவு பணியில் ஈடுபடுத்தாமல், மரத்தடியில் போராளிகள் அமரச் செய்தனர். அப்போதுதான் அருகிலிருந்த மாளிகையைப் பார்த்தேன். அது என்ன என்று போராளி ஒருவரிடம் கேட்டபோது, 'அதுதான் இயக்கத்தின் படைத்தளம்' என்றார். நான் ஆச்சரியத்தில் மூழ்கினேன். வீட்டுக்கு வந்து அம்மாவிடம், 'இங்கெல்லாம் வீடுகளில் தான் இயக்கத்தின் தளங்கள் இருக்கின்றன... யாழ்ப்பாணத்தில் மாளிகையில் தளம் அமைத்திருக்கிறார்கள்' என்றேன். அது தான் ஒரு காலத்தில் யாழ்ப்பாணப் பொது நூலகமாக இருந்தது என்று அம்மா அப்போது எனக்குச் சொன்னார். யாழ்ப்பாண நூலகம் பற்றி நான் முதன்முறையாக அறிந்தது அப்போதுதான்!" என்று யாழ் நூலகம் பற்றி முதன்முறையாகத் தான் அறிய நேர்ந்த கதையை விவரிக்கிறார் சோமிதரன். "என்னுடைய பத்தாம் வயதில்தான் எரிந்து நின்ற யாழ்ப்பாண கட்டடத்தை முதன்முதலாகப் பார்த்தேன். எங்கள் நூலகம் எரிக்கப்பட்ட வரலாற்றை, அது எரிக்கப்பட்டுப் பல ஆண்டுகளுக்குப் பிறகே தெரிந்துகொண்டேன்" என்கிறார்.


"யாழ் நூலக எரிப்பு என்பது ஓர் இனப்பிரச்னையின் பகுதி கிடையாது உலக தமிழர்களின் சொத்தாகத் திகழ்ந்த அந்த நூலகத்துக்குப் பெரும் வரலாறு இருக்கிறது. 15-ம் நூற்றாண்டில் மதுரையில் முகமதிய படையெடுப்பின்போது, அங்கிருந்த சுவடிகளைப் பாதுகாப்பதற்காக அவற்றை வல்லங்களில் ஏற்றி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள் சிலப்பதிகாரத்தின் மூலப் பிரதியை உ.வே. சாமிநாதர் யாழ்ப்பாணத்திலிருந்துதான் எடுக்கிறார் பல்வேறு காரணங்களால் தமிழகத்தில் ஓலைச்சுவடிகள் அழிக்கப்பட்டபோது, யாழ்ப்பாணத்தில் அவை பாதுகாக்கப்பட்டன. அது தமிழர்களின் பண்பாட்டு மையம், அறிவுத் தேடலின் அடையாளம்" என்று யாழ்ப்பாணத்தின், அதன் நூலகத்தின் வரலாற்று முக்கியத்துவத்தைச் சோமிதரன் விளக்குகிறார்.

"1983 கருப்பு ஜூலை கலவரத்துக்கு முன்பே தமிழர்களின் உளவியல் மீதான தாக்கம் தான் யாழ்ப்பாண நூலக எரிப்பு. 1983-க்குப் பிறகுதான் ஏராளமான இளைஞர்கள் ஆயுதப் போராட்டக் குழுக்களில் இணைந்தார்கள். ஆனால், அதற்கு முன்பே இளைஞர்களின் உளவியலில் ஆழமாகத் தாக்கத்தை இந்த நூலக எரிப்பு ஏற்படுத்தியிருக்கிறது. **தமிழர்கள் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள் கைகளிலிருந்து புத்தகங்கள் பறிக்கப்பட்டு எரிக்கப்படும்போது, அவர்கள் ஆயுதம் ஏந்துவதன் நியாயத்தை அந்த நூலக எரிப்பு சொல்லியது. எரிந்து நின்ற அந்தக் கட்டடம் ஈழப்போராட்டத்தின் நியாயத்தைச் சொல்லியது அதற்குச் சாட்சியாக நின்றது!"**

11ஆம் பக்கம் பார்க்க...

தொகுப்பு : சுழியோடி

# கொரோனா மூன்றாம் அலையில் சிக்கித் தவிக்கும் இலங்கை



சீனாவில் 2019 இறுதி பகுதியில் கொரோனா வைரஸ் உருவாகி உலகம் முழுவதும் புரட்டிப்போட்ட நிலையில் இவ் முதலாம் அலையில் இத்தாலி, பிரேசில், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் மிக பாரதூரமான பாதிப்புக்களை சந்தித்த நிலையில் எமது இலங்கை இவ் முதலாம் அலையின் போது அரசு எடுத்த துரிதகதியான நடவடிக்கையால் முதலாம் அலையின் தாக்கத்தின் அளவு மிகவும் குறைவான நிலை காணப்பட்டது.

2020 பெப்ரவரி மாதம் இறுதிப் பகுதியில் இலங்கையில் முதலாவது கொரோனா தொற்றாளர் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் மொத்தமாக முதலாவது அலையினால் சுமார் 2500 பேர் நோய் தொற்றில் பாதிக்கப்பட்டும் 13 பேர் மரணமடைந்தும் காணப்பட்ட நிலையில் முதலாம் அலை தடுக்கப்பட்ட நிலையில் 2ஆம் அலையின் வேகம் அதிகரித்து 1ஆம் அலையில் வெறும் 2500 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 2ஆம் அலையில் 2021 ஆம் ஆண்டு சுமார் 7 மாதங்களில் சுமார் ஒரு லட்சம் பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 600 பேர் நோய்த் தொற்றால் மரணமடைந்தனர். கொரோனா முதலாம் அலையின் போது அரசு எடுத்த காத்திரமான நடவடிக்கைகள் 2ஆம் அலையின் போது எடுக்கத்தவறி இருந்தது. இந்நிலையில் 2021 மார்ச் மாதமளவில் இந்தியாவில் உருவான கொரோனா வைரசானது டெல்ரா என்னும் வீரியம் கூடிய வைரஸ் எமது நாட்டையும் குறிவைத்தது. 2021 ஏப்ரல் மாதம் புதுவருட கொண்டாட்டத்துடன் தனது மூன்றாம் அலையை எமது நாட்டில் ஆரம்பித்த கொரோனா வைரஸ் நாட்டை புரட்டி போடத் தொடங்கியுள்ளது.

இவ் வைரஸ் தாக்கத்திற்கு புதுவருட கொத்தணி என எமது சுகாதாரப்பிரிவு பெயரிட்டுள்ளது. இவ் புதுவருட கொத்தணியின் தாக்கத்தால் சுமார் 80,000 பேர் நோய்த்தொற்றுக்குள்ளான நிலையில் சுமார் 900 பேருக்கு மேல் உயிரிழந்த நிலையில் மிகவும் கோரமான நிலைக்கு நாடு சென்று கொண்டிருக்கும் நிலையில் சுகாதாரப் பிரிவினர் நாட்டை உடனடியாக முடக்குமாறு கோரிய பொழுதிலும் அரசானது நாட்டை முடக்குவதற்கு தயங்கிய நிலையில் இறுதியில் கடந்த 2 வாரகாலம் முற்றாக பயணத்தடை விதித்துள்ளது. பயணத்தடை விதிப்பதற்கு முன்னர் மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை விதிக்கப்பட்டது. இப் பயணத்தடையானது எதிர்வரும் 7ஆம் திகதி அதிகாலை 4 மணியளவில் நீக்கப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில் இப் பயணத்தடை அமுலில் உள்ள நிலையில் நாளாந்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையில் எதுவித மாற்றமும் ஏற்பட்டதாக தெரியவில்லை. மரண எண்ணிக்கைகளும் நாளாந்தம் 45 பேர் என்றநிலையில்தான் உள்ளது. இந்நிலையில் எதிர்வரும் 7ஆம் திகதி பயணத்தடை நீக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றன.

சுகாதார பிரிவினரும் பயணத்தடையை யூன் மாதம் முழுவதிலும் தொடர்ந்து அமுல்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்து வருகின்றனர். உலகில் மிக முக்கிய நாடுகள் பல இலங்கை பயணிகள் வருகைக்கு தடை விதித்துள்ளது. அத்துடன் உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கொரோனா வைரஸ் அலையின் தாக்க அடிப்படையில் சிவப்பு பட்டியலிடப்பட்டுள்ள நாடுகள் வரிசையில் இலங்கையும் உள்வாங்கப்பட்டுள்ளது. சிவப்பு எச்சரிக்கை வலய நாடுகளின் பட்டியலில் மூன்றாவது இடத்தில் இலங்கை உள்ளது ஓர் மிகவும் ஆபத்தான நிலையாகும். அத்துடன் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் இலங்கையின் 98 சதவீதமான அதாவது முழுப்பகுதியும் ஆபத்தான சிவப்பு வலயங்களாக மாறியுள்ளன. இந்நிலையில் சீனா, ரஷ்யா போன்ற நாடுகளிடம் இருந்து தடுப்பூசிகள் பெறப்பட்ட நிலையில் மிகவும் ஆபத்தான வலயமாக கணிக்கப்படும் இடங்களை தெரிவுசெய்து முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் கம்பஹா மாவட்டம், கொழும்பு, காலி, மாத்தளை, கண்டி, இரத்தினபுரி, யாழ்ப்பாணம் என தடுப்பூசிகள் செலுத்துதல் இடம்பெற்றுவருகின்றது. யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாட்களாக தடுப்பூசிகள் செலுத்தல் நடைபெற்றுவரும் நிலையில் அங்குள்ள மக்கள் இவ் ஊசியினை பெறுவதற்கு தயக்கம் காட்டி வருவதாக மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார். அங்குள்ள மக்கள் இவ் தடுப்பூசி பற்றிய தெளிவின்மையால் தடுப்பூசியை பெறுவதற்கு தயக்கம் காட்டி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ் கொரோனா 3ஆம் அலையின் தாக்கம் வடமாகாணம் கிழக்கு மாகாணம் ஆசிய பகுதிகளையும் கொடூரமாக தாக்கி வருகின்றது. வடமாகாணத்தில் நாளாந்தம் சுமார் 200பேர் என்ற அளவிலும் கிழக்கு மாகாணங்களில் நாளாந்தம் 300 பேர் என்ற அளவிலும் கொரோனா தொற்றின் தாக்கம் அதிகரித்து செல்லுகின்றது. கிழக்கு மாகாணத்தில் தற்பொழுது வரை திருகோணமலை மாவட்டம் மிக அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் முல்லைத்தீவு கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இது இவ்வாறிருக்கையில் அரசு பயணத்தடையை அமுல்படுத்திய பொழுதிலும் வடகிழக்கு மாகாணங்களில் மக்கள் இப்பயணத்தடையை உதாசீனப்படுத்தி வருவதாகவும் நோயின் தாக்கம் குறித்து பெரிதாக கவலையின்றி செயல்படுவதாகவும் பொலிசாரும் இராணுவத்தினரும் குற்றம்சாட்டி வருகின்றனர். இதற்கிடையில் இப் பயணத்தடை காரணமாக அன்றாட கூலி வேலை செய்வோர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமது நாளாந்த வருமானம் இன்றி மிகவும் மோசமான பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளதாக கூறப்படுகின்றது. அரசானது இப்பயணத்தடை காலத்தில் வீடுகளுக்கு சென்று அத்தியாவசிய பொருட்களை விநியோகிக்க ஏற்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கின்ற நிலையில் அன்றாடம் கூலி வேலை செய்து வருவோர் இவ் பயணத்தடையில் வேலை வாய்ப்பின்றி வீடுகளுக்குள்ளேயே முடங்கியுள்ள நிலையில் அத்தியாவசியப் பொருட்களை வீடுகளுக்கு சென்று கொடுக்கும் பொழுதும் அதனை வாங்குவதற்கு பணத்தை யார் கொடுப்பார்கள் என்ற கேள்வியை அவர்கள் கேட்பது நியாயமானது தான் உண்மையில் கூலித் தொழிலாளிகளின் குடும்பங்கள் மிகவும் பாதிப்படைந்து ஒரு வேளை உணவுக்கே அவதிப்படும் நிலை காணப்படுகின்றது. கிராமங்களில் உள்ள கடைகளில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் 2 மடங்கு அதிகரித்து காணப்படுகின்றது. பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல் சில வர்த்தகர்கள் இவ் கொரோனா தாக்க பயணத்தடையை பயன்படுத்தி கோடிஸ்வரர்கள் ஆக முயல்வது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். இந்நிலையில் அரசானது வ.சமுர்த்தி பயணாளிகள் வறுமைக் கோட்டுக்குள் உள்ளவர்கள் நாளாந்த கூலி வேலை செய்வோர் என தெரிவு செய்யப்படுபவர்களுக்கு 5000 ரூபாய் நிவாரண நிதி வழுங்கும் செயல்பாடானது நாடளாவிய ரீதியில் 02.06.2021 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த தடவை இவ் 5000 ரூபாய் கொடுப்பனவு சுமார் 3 நாட்களில் கொடுத்து முடிந்த நிலையில் இம்முறை பயணத்தடை காரணமாக இக் கொடுப்பனவு கொடுத்து முடிக்க 2 வார காலம் செல்லும் என தெரிவிக்கப்படுகின்றது.


இந்நிலையில் இப்பணம் கிடைக்கும் பொழுது பல குடும்பங்களில் பட்டினிச்சாவு ஏற்பட்டுவிடும் போல தெரிகின்றது. அத்துடன் அரசானது பயணத்தடை விதித்த காலங்களில் ஆடைத்தொழிற்சாலைகளை தடையின்றி செயல்பட வைத்தமையானது ஓர் வழியில் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கும் உற்பத்தி நிலையை தக்க வைப்பதற்காக இருக்கலாம் என்ற நிலையிலும் இவ் ஆடைத்தொழிற்சாலைகளின் செயல்பாட்டால் பல மாவட்டங்களின் அதிகளவான கொரோனா தொற்றாளர்கள் தற்பொழுது வரை .னங்காணப்பட்டு வருகின்றனர். குறிப்பாக கடந்த மே மாதம் முதல் கிளிநொச்சி முல்லைத்தீவு மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் உள்ள ஆடைத்தொழிற்சாலைகளில் பலர் நோய்த்தொற்றுக்குள்ளான நிலையில் மட்டக்களப்பு ஆடைத்தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களில் உள்ள ஆடைத்தொழிற்சாலைகள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றமையானது மிகப்பெரும் கொரோனா கொத்தணியை உருவாக்கிவிடுமோ என மக்கள் அச்சமடைந்துள்ளனர். அண்மையில் வவுனியாவில் இயங்கும் ஆடைத்தொழிற்சாலைகளில் பணி புரிவோரில் பலருக்கு நோய்த்தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இது வவுனியா மாவட்டத்தில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் அபாயம் தோன்றியுள்ளது.

எனவே அரசானது நோய் தொற்றிலிருந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவதற்கு முன்னுரிமை அழிக்க வேண்டும் அதைவிடுத்து நோய் தொற்றையும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க தொழிற்சாலைகளை இயங்க வைத்து பரவலாக இரண்டையும் இணைத்து செயல்படுவதானது மிகவும் இக்கட்டான நிலைக்கு நாட்டை கொண்டு சென்றுவிடும் மனித உயிர்களுடன் பொருளாதாரத்தை ஒப்பிடாமல் முதலில் மனித உயிர்களை காப்பதற்கான காத்திரமான முடிவுகளை அரசு உடனடியாக எடுக்க வேண்டும். ஏற்கனவே எமது நாட்டில் கடந்த முப்பது ஆண்டுகால இனப்போரில் இலட்சக்கணக்கான மக்கள் அழிந்து போன நிலையில் இவ்வாறான நோய்களால் மக்கள் அழிவை தடுக்க அரசு முன் வரவேண்டும் சுகாதாரப்பிரிவினரும் பொலிசாரும் இராணுவத்தினர் என அனைவரும் இக் கொரோனா வைரசை முறியடிக்க போராடிவரும் நிலையில் மக்களும் இவ் நோய் தொற்றின் அபாய நிலையை கருத்தில் கொண்டு சுகாதார தரப்பினரும் இராணுவத்தினரும் பொலிசாரும் அரசும் கொடுக்கும் அறிவுறுத்தல்களை செவிகொடுத்து இக்கொடிய கொரோனா நோயை எமது தாய் நாட்டில் இருந்து விரட்ட அனைத்து இன மக்களும் ஒன்றிணைவது காலத்தின் கட்டாயமாகும்.

**தாயகத்தான்**



# பிராந்தியச் செய்திகள்



## நாட்டில் இன்று 2,976 பேருக்குக் கொரோனா தொற்று கண்டறிவு!

நாட்டில் இன்று(ஞாயிறு) இரண்டாயிரத்து 976 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கையில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு இலட்சத்து ஐயாயிரத்து 333ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்த ஆயிரத்து 172 பேர் இன்று வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறிய நிலையில், மொத்தமாக ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 304பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

அத்துடன், கொரோனா தொற்றினால் மரணித்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 696ஆகப் பதிவாகியுள்ளது.

இந்நிலையில், 36ஆயிரத்து 333 கொரோனா தொற்றாளர்கள் தொடர்ந்து வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனா தடுப்பூசியின் முதலாவது டோஸ் இதுவரை 19இலட்சத்து 43 ஆயிரத்து 708 பேருக்குச் செலுத்தப்பட்டுள்ள நிலையில் இரண்டாவது டோஸ் இதுவரை மூன்று இலட்சத்து 53ஆயிரத்து 156 பேருக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

## 21 ம் திகதிவரை போக்குவரத்து கட்டுப்பாடுகளை நீடிக்கவேண்டும் - சுகாதார அதிகாரிகள்

21ம் திகதிவரை போக்குவரத்து கட்டுப்பாடுகளை நீடிக்கவேண்டும் என சுகாதார அதிகாரிகள் ஜனாதிபதி கோட்டபாயராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். போக்குவரத்து கட்டுப்பாடுகளை நீடிப்பது கொரோனாவைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கு உதவும் என்ற அடிப்படையிலேயே அவர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

போக்குவரத்து கட்டுபாடுகளால் பலன் ஏற்படுவதை உறுதி செய்வதற்காக 21 ம் திகதி வரை கட்டுப்பாடுகளை நீடிக்குமாறு சுகாதார அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன. இதேவேளை பெருமளவு மக்கள் நடமாடுவதால் 14ம் திகதிவரை விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் பலனற்றவையாக காணப்படுகின்றன என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



## போக்குவரத்து கட்டுப்பாடுகளை மீறுபவர்களை தனிமைப்படுத்த உத்தரவு!

போக்குவரத்து கட்டுப்பாடுகளை மீறி வீதிகளில் பயணிப்பவர்களை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் அனைத்து பொலிஸ்நிலையங்களிற்கும் உத்தரவிட்டுள்ளார்.

போக்குவரத்து விதிமுறைகளை மீறியவர்களை அந்த பகுதி சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையுடன் தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.



இதன்காரணமாக அத்தியாவசியமற்ற தேவைகளிற்காக உரிய அதிகாரிகளின் அனுமதியின்றி பயணிப்பவர்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள் என பொலிஸ் அதிபர் தெரிவித்துள்ளார்.

அவர்களை பொலிஸ் அதிகாரிகளால் தனிமைப்படுத்த முடியாது என்பதால் பொலிஸாரின் வேண்டுகோளின் அடிப்படையில் சுகாதார அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசி - சுகாதார அமைச்சு அறிவிப்பு


கர்ப்பிணித் தாய்மார்களுக்கு எதிர்வரும் புதன்கிழமை முதல் தடுப்பூசி செலுத்த சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.

மகப்பேறு வைத்தியர்களின் வேண்டுகோளைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, ஒரு மாதத்திற்குள் கர்ப்பிணித் தாய்மார்கள் அனைவருக்கும் தடுப்பூசி செலுத்துவதை நோக்கமாக கொண்டு அமைச்சு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

அந்தவகையில் கொழும்பில் உள்ள பெண்களுக்கான கேஸில் ஸ்ட்ரீட் வைத்தியசாலை மற்றும் பிலியந்தலை எம்.ஓ.எச் அலுவலகத்திலும் தடுப்பூசி நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

சுகாதார அமைச்சு வெளியிட்ட தரவுகளின் அடிப்படையில் இதுவரை நாட்டில் கொரோனா தொற்றினால் 8 கர்ப்பிணித் தாய்மார்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





## யாழில் மேலும் இருவர் கொரோனா தொற்றினால் உயிரிழப்பு!

யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றினால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொக்குவிலைச் சேர்ந்த 85 வயதுடைய ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்ற நிலையில் அன்று (சனிக்கிழமை) உயிரிழந்துள்ளார்.

அதேபோல், அளவெட்டியைச் சேர்ந்த 65 வயதுடைய பெண்ணொருவர் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் இன்று உயிரிழந்துள்ளார்.

இதன்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா தொற்றினால் ஏற்பட்ட உயிரிழப்பு 50ஆக அதிகரித்துள்ளது.



## நல்லூர்-அரசடிப் பகுதியில் 55 பேருக்குக் கொரோனா தொற்று!

யாழ்ப்பாணம், நல்லூர்-அரசடி பகுதியில் 55 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் 156 பேருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே இவ்வாறு தொற்றுக்குள்ளானவர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதி கடந்த மாதம் முதல் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் முடக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அன்று(2021.06.05) அப்பகுதியில் வசிக்கும் 156 பேருக்குப் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# ரோஜா சீரியல் படப்பிடிப்பு தொடங்கியது

தமிழகத்தில் நாளுக்கு நாள் கொரோனா அதிகரித்துக் கொண்டே வந்தது.



நோய் தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முழு ஊரடங்கு ஒன்றே வழி என கடந்த இரண்டு வாரங்களாக அரசு உத்தரவிட்டது. தற்போது கொரோனா நோய் தொற்று தாக்கம் குறைவாகவே காணப்படுகிறது.

படப்பிடிப்புகள் அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது ரோஜா சீரியல் படப்பிடிப்பு தொடங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

சன் டிவி அலுவலகத்தில் அர்ஜீன்-ரோஜா பெட் ரூம் செட் போடப்பட்டு படப்பிடிப்பு நடப்பதாக கூறப்படுகிறது. இன்றிலிருந்து படப்பிடிப்பும் தொடங்கியுள்ளதாம்.

தற்போது ரோஜா சீரியலில் எல்லோரும் ஆவலாக எதிர்ப்பார்த்த நீதிமன்ற காட்சிகள் விறுவிறுப்பாக ஒடிக் கொண்டிருக்கிறது.

# 100 குடும்பத்திற்கு உதவிய விஜய் பட நடிகை

கொரோனா காலத்தில் நடிகைகள் பலரும் தங்களால் முடிந்த உதவிகளை செய்து வரும் நிலையில் விஜய் பட நடிகை 100 குடும்பங்களுக்கு உதவி செய்து இருக்கிறார்.

கொரோனா காலத்தில் நடிகைகள் பலரும் தங்களால் முடிந்த உதவிகளை செய்து வருகின்றனர். தமிழ், தெலுங்கு, ஹிந்தியில் முன்னணி நடிகையாக திகழும் பூஜா ஹெக்டேவும் கொரோனாவால் வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்கு உதவ முன் வந்துள்ளார்.

இதற்காக ஒரு மாதத்திற்கு தேவையான ரேசன் பொருட்களை கஷ்டப்படும் 100 குடும்பத்தினருக்கு வழங்க ஏற்பாடு செய்துள்ளார். இதுதொடர்பான போட்டோக்கள் சமூக வலைதளத்தில் வெளியாகி உள்ளது.

நடிகை பூஜா ஹெக்டே தற்போது விஜய்க்கு ஜோடியாக தளபதி 65 படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தை நெல்சன் இயக்கி வருகிறார்.



# மகேஷ் பாபுவின் படத்தில் வில்லனான தமிழ் சினிமாவின் டாப் ஹீரோ,

தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகராக விளங்கி வருபவர் தான் நடிகர் மகேஷ் பாபு. இவரின் திரைப்படங்கள் எப்போதும் பெரியளவில் வரவேற்பை பெறும்.



அந்த வகையில் இவர் நடிப்பில் இயக்குனர் பரசுராம் இயக்கத்தில் உருவாகி வரும் **Sarkaru Vaari Paata** திரைப்படம் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இப்படத்தில் அவருக்கு ஜோடியாக நடிகை கீர்த்தி சுரேஷ் நடிக்கவுள்ளார். மேலும் இப்படத்தில் தமிழ் சினிமாவின் டாப் நடிகர் வில்லனாக நடிக்கவுள்ளார்.

ஆம், நடிகர் அர்ஜீன் இப்படத்தில் மகேஷ் பாபுவிற்கு வில்லனாக நடிக்கவுள்ளார். மேலும் இதற்கு முன் அர்ஜீன் வில்லனாக நடித்த இரும்பு திரை படம் பெரிய வரவேற்பை பெற்றது.

# மாநாடு படத்தின் முக்கிய அப்டேட்டை வெளியிட்ட யுவன் சங்கர் ராஜா

வெங்கட் பிரபு இயக்கத்தில் உருவாகி உள்ள 'மாநாடு' படத்தில் சிம்புவுக்கு ஜோடியாக கல்யாணி பிரியதர்ஷன் நடித்துள்ளார். சிம்பு நடிப்பில் உருவாகி உள்ள படம் மாநாடு. வெங்கட் பிரபு இயக்கியுள்ள இப்படத்தை தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி பெரும் பொருட்செலவில் தயாரித்துள்ளார். இப்படத்தில் சிம்பு அப்துல் காலிக் என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். சிம்புவுக்கு ஜோடியாக கல்யாணி பிரியதர்ஷனும், வில்லனாக எஸ்.ஜே.சூர்யாவும் நடித்துள்ளனர். இப்படத்திற்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைத்துள்ளார்.

மாநாடு படத்தின் முதல் பாடல் ரம்ஜான் பண்டிகையன்று வெளியிடப்படும் என அறிவித்திருந்த படக்குழு, அந்த சமயத்தில் இயக்குனர் வெங்கட் பிரபு தாயார் மரணமடைந்ததால், அப்பாடல் வெளியீடை தள்ளிவைத்தனர்.

இந்நிலையில், தள்ளிவைக்கப்பட்ட மாநாடு படத்தின் பாடல் வெளியீடு குறித்த அப்டேட்டை இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜா வெளியிட்டுள்ளார். மிக விரைவில் அப்பாடல் வெளியிடப்படும் என அவர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். இதன்மூலம் மாநாடு படத்தின் முதல் பாடல் ஓரிரு வாரத்தில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.




# ஓராண்டுக்கு பின் 'துப்பறிவாளன் 2' படத்தின் அப்டேட்டை வெளியிட்ட நடிகர் விஷால்

கடந்த ஓராண்டாக 'துப்பறிவாளன் 2' குறித்து எந்தவித தகவலையும் வெளியிடாமல் இருந்த விஷால், தற்போது அதுகுறித்த அப்டேட்டை வெளியிட்டுள்ளார்.

மிஷ்கின் இயக்கத்தில் விஷால், பிரசன்னா, வினய் நடித்து கடந்த 2017-ம் ஆண்டு வெளிவந்த படம் துப்பறிவாளன். இந்த படத்தில் ஒரு நேர்மையான டிடெக்டிவ் அதிகாரியாக விஷால் மற்றும் பிரசன்னா நடித்திருப்பார்கள். இந்த படம் வெளிவந்து ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றதால், இப்படத்தின் இராண்டாம் பாகத்தை எடுக்க துவங்கினர்.

இதன் இரண்டாம் பாகத்தில் விஷால் மற்றும் பிரசன்னா ஆகியோருடன் ரகுமான், கௌதமியும் நடித்துள்ளனர். இளையராஜா இப்படத்திற்கு இசையமைக்கிறார். இதன் முதற்கட்ட படப்பிடிப்பு லண்டனில் நடந்து முடிந்தது. இதையடுத்து விஷாலுடன் ஏற்பட்ட கருத்து மோதல் காரணமாக இப்படத்தில் இருந்து மிஷ்கின் விலகினார்.

இதனால் மீதிப் படத்தை தானே இயக்க உள்ளதாக விஷால் கடந்தாண்டு அறிவித்தார். இந்த அறிவிப்பை அடுத்து கடந்த ஓராண்டாக இப்படம் குறித்து எந்தவித அப்டேட்டும் வெளியாகவில்லை. இதனிடையே 'துப்பறிவாளன் 2' படத்தை நடிகர் விஷால் கிடப்பில் போட்டுவிட்டதாக தகவல் பரவி வந்தது.

இந்நிலையில், 'துப்பறிவாளன் 2' படம் குறித்த அப்டேட்டை வெளியிட்டுள்ளார் விஷால். கொரோனா ஊரடங்கு முடிவுக்கு வந்ததும் 'துப்பறிவாளன் 2' படத்தின் எஞ்சியுள்ள காட்சிகளை எடுத்து முடிக்க உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். நடிகர் விஷால் இயக்க உள்ள முதல் படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.




தொகுப்பு :- ஹாசினி




# கூந்தல் வறண்டு போகாமல் தடுக்க குறிப்புகள்!

இயற்கை கூந்தல் பராமரிப்பு கெமிக்கல்கள் நிறைந்த கூந்தல் பராமரிப்பு பொருட்களை ஒதுக்கி விட்டு இயற்கை பொருட்களை தேர்ந்தெடுங்கள். ஏனெனில் கெமிக்கல் பொருட்கள் ஈஸியாக உங்கள் கூந்தலை வறட்சியடைய செய்து விடும். இயற்கை பொருட்களான தேங்காய் எண்ணெய், ஆர்கான் எண்ணெய், பாதாம் எண்ணெய், ஆலிவ் ஆயில், அவகேடா எண்ணெய், ஷீ பட்டர், ரோஸ் வாட்டர், களிமண், கரித்தூள், தேன் போன்றவற்றை பயன்படுத்துங்கள். உங்கள் கூந்தலுக்கும் இயற்கையான பொலிவு கிடைக்கும்.

ஆலிவ் ஆயில் சிகச்சை ஆலிவ் ஆயில் வறண்ட கூந்தலுக்கான மிகச் சிறந்த முறையாகும். இந்த முறையை வாரத்திற்கு ஒரு முறை என கூட செய்து வரலாம். ஆலிவ் ஆயிலை கூந்தலில் அப்ளே செய்யும் பொது அது ஒரு சிறந்த மாய்ஸ்சரைசர் மாதிரி செயல்பட்டு வறண்ட மற்றும் பொடுகு தொல்லையை போக்குகிறது.



அவகேடா மாஸ்க் அவகேடா, தேன் மற்றும் ஆலிவ் ஆயில் சேர்ந்த ஹேர் மாஸ்க் வறண்ட கூந்தலுக்கு சிறந்த வரப்பிரசாதம். இதை வாரத்திற்கு இரண்டு முறை என செய்து வந்தால் மென்மையான பட்டு போன்ற கூந்தல் கிடைக்கும்.

முட்டை மாஸ்க் வறண்ட கூந்தலுக்கு முட்டை மாஸ்க்கும் சிறந்தது. முட்டையின் வெள்ளை கரு, ஆலிவ் ஆயில் சேர்த்து தலையில் கூந்தலில் அப்ளே செய்ய வேண்டும். பிறகு 15–20 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் கழுவவும். இதைச் செய்து வந்தால் உங்கள் கூந்தல் பட்டு போல் அலைபாயும்.

கற்றாழை உங்கள் வறண்ட கூந்தல் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர கற்றாழை ஜெல் பெரிதும் பயன்படுகிறது. கற்றாழை ஜெல்லை மயிர்க்கால்களில் படும் படி தேய்க்கும் போது அது முடியின் வேர்க்கால்களை க்குள் நுழைந்து கூந்தல் வறண்டு போவதை தடுக்கிறது. கற்றாழை ஜெல்லை தடவிய பிறகு ஒரு ஒரு மணி நேரம் அப்படியே வைக்க வேண்டும். பிறகு மைல்டு சாம்பு கொண்டு அலசிக் கொள்ளுங்கள்.

வாழைப்பழம் உடலுக்கும் மனதுக்கும் ஒரு ஆரோக்கியமான உணவாகும். இதில் உள்ள ஏராளமான ஊட்டச்சத்துகள் கூந்தலுக்கும் உதவுகிறது. வறண்ட கூந்தல் தலையில் அரிப்பு, பொடுகு போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. இதிலுள்ள இயற்கையான எண்ணெய் பசை, பொட்டாசியம், விட்டமின்கள் போன்றவை கூந்தலுக்கு இயற்கையான வலிமையை கொடுக்கிறது. கூந்தலின் நுனி பிளவுபடுவதை தடுக்கிறது. மேலும் கூந்தலுக்கு போதுமான ஈரப்பதத்தை கொடுத்து பட்டு போல் ஆக்குகிறது. பிறகென்ன உங்கள் வறண்ட கூந்தலுக்கு இயற்கையான எழில் மிகு கூந்தலை பெறுங்கள்.

# கற்றாழை பேஸ் பேக் இனி பார்லருக்கே போக மாட்டீங்க!

நம் வீட்டில் வளர்க்கும் செடிகளில் ஒன்றான கற்றாழையில் ஏராளமான நன்மைகள் நிறைந்துள்ளது. நம்முடைய சருமம் மட்டுமல்ல கூந்தலுக்கும் பெரிதும் உதவுகிறது. மட்டுமல்லாமல் முகப்பருவை நீக்கவும் உதவி செய்கிறது. இந்த கற்றாழையை வைத்து பல அழகு பொருட்கள் தயாரிக்கப்படுகிறன. இதை தினமும் முகத்தில் தடவி வந்தால் முகம் பளிச்சென இருக்கும். வாங்க இதில் உள்ள இன்னும் சில நன்மைகள் குறித்து பார்க்கலாம் .

புருவங்கள் பொலிவு பெறும் :– சிலருக்கு புருவங்கள் வறண்டு பொலிவிழந்து காணப்படும் . இதனால் கண்களின் அழகும் பொலிவிழந்து காணப்படும் . கற்றாழை ஜெல்லை புருவத்தில் வைத்து மசாஜ் செய்வதின் மூலம் புருவங்களில் அடர்த்தியும் பொலிவும் கூடும்.

கருமையை நீக்கும் :–நம்மில் பலருக்கும் முகம் தவிர கழுத்தின் பின் பகுதியில் கருமை நிறத்தில் காணப்படும். இதை இயற்கையாகவே போக்க கற்றாழை உதவுகிறது.

குளிப்பதற்கு அரை மணி நேரத்திற்கு முன் கற்றாழை ஜெல்லை கழுத்தில் கருமையாகக் காணப்படக்கூடிய பகுதியில் தேய்த்து 10நிமிடங்கள் மசாஜ் செய்து குளித்து வந்தால் நாளடைவில் கழுத்து பகுதியில் கருமை நீங்கி சருமம் ஒரே நிறத்திற்கு வரும்.

மூட்டுகளில் உள்ள கருமை நீங்கும் :–குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை நல்ல நிறத்தை உடையவர்களாக இருந்தாலும் மூட்டுகளில் உள்ள கருமை நிறம் தனியாகத் தெரியும்.

கற்றாழை ஜெல்லுடன் கோதுமை தவிடு சேர்த்து கலந்து மூட்டுகளில் தேய்த்து 10நிமிடங்கள் வரை மசாஜ் செய்து வந்தால் மூட்டுகளில் உள்ள கருமை நிறம் போய்விடும்.

தேமலை தடுக்கும் :–இது சருமத்தில் ஏற்படும் தேமலை தடுக்கும் தன்மை கொண்டது. கற்றாழை ஜெல்லுடன் வேப்பிலை, மஞ்சள் தூள் சேர்த்து அரைத்து தேமல் மீது தடவி காய்ந்ததும் குளிர்ந்த நீரில் கழுவி வர தேமல் படர்வது கட்டுப்படும். நாளடைவில் தேமல் தடிப்புகள் கொஞ்சம் கொஞ்சமாக மறையும்.

கற்றாழை ஃபேஸ் பேக் :

தேவையான பொருட்கள் :



கற்றாழை ஜெல் :1டேபிள் ஸ்பூன்

சர்க்கரை பவுடர் :3டேபிள் ஸ்பூன்

தேன்:1டேபிள் ஸ்பூன்

செய்முறை :–

ஒரு நான்ஸ்டிக் பேனில் கற்றாழை ஜெல்லை சேர்த்து சூடேற்ற வேண்டும்.

ஜெல் கொதிக்க ஆரம்பிக்கும் பொழுது அதில் சர்க்கரை பவுடர் சேர்த்து கட்டியில்லாமல் நன்கு கிளறி விடவும்.

இறுதியில் தேன் சேர்த்து கலந்து அடுப்பில் இருந்து இறக்கி விடவும்.

முதலில் ஒரு பிரஷ் கொண்டு கற்றாழை கலவையை முகம், கழுத்து, கைமற்றும் கால்களில் தடவ வேண்டும்.

20நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீர் பயன்படுத்தி சிறிது நேரம் மசாஜ் செய்து பின் குளிர்ந்த நீரில் நனைத்த பஞ்சு கொண்டு துடைத்து எடுக்கவும். முகம் பளிச்சென மாறும்.

தொகுப்பு :– ஹாசினி

06 ஆம் பக்க தொடர்ச்சி...

என அச்சம்பவத்தின் அரசியல் வெளிப்பாடுகளாகச் சோமிதரன் பார்க்கிறார். எரிக்கப்பட்ட யாழ் நூலகக் கட்டடத்தை இலங்கை அரசாங்கம் 2003-ல் புதுப்பித்து, திறக்க முயன்றது. ஆனால், மிகக் கடுமையான எதிர்ப்புகளுக்குப் பிறகு எந்த விழாவும் இன்றி, எதிர்ப்புகளை மீறி நூலகம் செயல்படத் தொடங்கியது. கண் முன்னே ஒரு வரலாறு அழிக்கப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு சோமிதரன் அதை ஆவணப்படுத்தும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்.

"அது வெறும் நூலகக் கட்டடம் மட்டுமல்ல 25 ஆண்டுக்கால ஈழப் போராட்டத்தின் சாட்சி. 97 ஆயிரம் புத்தகங்களை இழந்து நின்ற அந்த நூலகம் பிறகு புலிகளின் தளமாகவும் இருந்திருக்கிறது. யாழ் நூலகம் இருந்தபோதும் ஓர் அரசியல், எரிக்கப்பட்டதிலும் ஓர் அரசியல், அதைப் புதுப்பிப்பதிலும் அரசியல் என இன்றுவரை அதைச் சுற்றி அரசியல் இருக்கிறது. இந்த வரலாறு, அரசியல் ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்று விரும்பினேன். அப்போது பத்திரிகையாளராக இருந்த நான், 'கலாசார படுகொலை' என்று இதுபற்றி ஆங்கிலத்தில் கட்டுரை எழுதினேன். தொடர்ந்து ஆவணப்படம் எடுக்கும் முயற்சியில் இறங்கினேன்.

ஆவணப்படம் எடுக்கத் தயாரான போது இலங்கையில் மறுபடியும் போர் மூண்டுவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் வேறு வழியே இல்லாமல் போய்விடும் என்பதால், என்ன நடந்தாலும் சரி எனச் செயலில் இறங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்று முடிவெடுத்தேன். எதிர்காலத்தில் யாராலும் அந்த வரலாற்றை மீட்டெடுக்க முடியாமல் போய்விடலாம் என்ற அச்சத்தில் பல்வேறு இடர்களுக்கு மத்தியில் 'எரியும் நினைவுகள்' ஆவணப்படத்தை எடுத்து முடித்தேன். அது இப்போது யூடியூப்பில் காணக்கிடைக்கிறது" என்று ஆவணப்பட அனுபவங்களைப் பகிர்கிறார் சோமிதரன்.

"வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ் நூலகத்தைப் புதுப்பித்து மீண்டும் செயல்பாட்டுக் கொண்டுவந்திருப்பது நல்ல நோக்கமாக இருந்தாலும், தமிழர்களின் அடையாளம் அழிக்கப்பட்டுவிட்டது. இன்று யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் எவரும், புதுப்பிக்கப்பட்ட நூலகத்தின் முன்பாக புகைப்படம் எடுத்துக் கொள்வார்கள். ஆனால், எரிந்து நின்ற கட்டடம் அப்படியே பாதுகாக்கப்பட்டிருந்தால் காலத்துக்கும் வரலாற்றுச் சாட்சியமாக இருந்திருக்கும். தமிழர்கள் வஞ்சிக்கப்பட்டுவிட்டார்கள்" என மௌனமாகிறார் சோமிதரன்!

**புராதனம் பறைசாற்றும் ஓலைச்சுவடிகள்**

1800-களில் யாழில் தகவல் தந்த செய்தி ஏடுகள், தொன்மைவாய்ந்த வரலாற்று ஆவணங்களை உள்ளடக்கி எம்மவரின் உணர்வுகளின் எழுத்துருவாய் வீறுடன் விளங்கியது யாழ். நூலகம்.

## இருப்பின் அடையாளத்தை அரிக்கும் கறையான்கள், பழம்பெருமையை அழிக்க தீ வடிவம் கொண்டு யாழ். நூலகத்தை பற்றின.

1981 ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி நள்ளிரவு வேளை, தெற்காசியாவின் அறிவுக் களஞ்சியத்தை தீச்சுவாலைகள் விழுங்க ஆரம்பித்தன.

நூலகம் எரியூட்டப்பட்டவேளை இரவல் வழங்கும் பகுதியில் சுமார் 57 ஆயிரம் நூல்களும், சிறுவர் பகுதியில் 8,995 நூல்களும் உசாத்துணை பகுதியில் கிடைத்தற்கரிய 29, 500 நூல்களும் இருந்தன.

இவை அனைத்தும் தீயினால் சிதைக்கப்பட்டு, சீரழிக்கப்பட்டன என்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட செய்தியை கேள்வியுற்ற மாத்திரத்திலேயே பரிசுத்த பெட்ரிக்ஸ் கல்லூரி ஆசிரியர் தாவீது அடிகளார் தன்னுயிர் நீத்தார்.

பற்றிய எப்பொருளுக்கும் தன் வடிவம் கொடுக்கும் தீ அறிவுப் பசிக்கு விருந்தாகும் புத்தகங்களை உண்டு தன்பசி தணித்தது.

சுமார் ஒரு இலட்சம் புத்தகங்கள் நிறம்மாறி, மணம் மாறி உருச்சிதைந்து சாம்பரானதை அத்தனை இலகுவில் கடந்துவிட முடியாது.



02ஆம் பக்க தொடர்ச்சி...

இந்த வாய்ப்புகள் அதிகரிக்க அதிகரிக்க இங்கிருக்கின்ற இந்தியாவில் இருக்கும் இலங்கை மக்களுக்கு பெரும் ஆபத்தாக கூட மாறலாம். இந்த 13 நாட்களில் இலங்கையினுடைய இராணுவ வீரர்கள் ஒரு நாளைக்கு 200 முதல் 240 வரையான சாக்குப்பைகளில் இந்த பொருட்களை அள்ளிக் கொண்டிருக்கின்றார்கள். அந்தளவிற்கு அந்த மைக்ரோ பிளாஸ்டிக்ஸ் கலந்திருக்கிறது. இலங்கை இராணுவ வீரர்கள் மைக்ரோ பிளாஸ்டிக்ஸை அள்ளும் பொழுது அவர்கள் பாதுகாப்பாக இருப்பதற்காக கைகளுக்கு கவர்களை எல்லாம் போட்டிருக்கின்றார்கள்.

ஆனால் மீன்கள் மற்றும் இயற்கை என்ன செய்யும்? நாம் மட்டும் வாழ்ந்தால் போதுமா என்ற கேள்வி இங்கு கேட்கப்படுகின்றது இதற்கு வேறொரு உதாரணமும் சொல்லப்படுகின்றது. 2020 நவம்பர் மாதத்தில் இருந்தே பல விஞ்ஞானிகளும் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு கன்டைனர் சிப்பில் தீவிபத்து ஏற்படுகின்றது என்பதைத்தான் சொல்லிவருகின்றார்கள். ஆகவே 2020 இல் இருந்தே இதுவொரு பேசுபொருளாக இருக்கும் பொழுதே கெமிக்கல்களை ஏற்றிவருகின்ற இந்த மாதிரியான கப்பல்கள் அதனுடைய சர்வீஸ் அதை பாதுகாக்க நினைப்பவர்கள் இவ்வளவு அலட்சியமாக இருந்தால் வருங்காலத்தில் இருக்கும் ஆபத்தை யாரால் தடுக்க முடியும்.

ஒரு பக்கம் வைரஸ் இன்னுமொரு பக்கம் தீவிரவாதம் இன்னொருபக்கம் மனிதர்களுடைய கண்டுபிடிப்புக்களால் ஏற்படக்கூடிய அழிவுகள் இதற்கு நடுவில் நாம். நாம் பாதிப்படைவது என்பது வேறொரு பக்கம். நம்மால் இயற்கையும் பாதிப்படைந்துகொண்டு இருக்கின்றது. அந்த இயற்கையை நம்பிக்கொண்டிருக்கின்ற வாயில்லா ஜீவன்களும் பாதிப்படைந்து கொண்டு இருக்கின்றது. இதற்கு சரியான தொரு தீர்வு கிடைக்குமா? கடைசி மீனர்வளுக்காவது ஏதாவது கிடைக்க வாய்ப்புக்கள் இருக்கின்றதா? பார்ப்போம் இவ் இலங்கை அரசு என்ன செய்யப்போகின்றது என்று.



# ஒரு வரி சிந்தனை துளிகள்

1. தாயின் இதயமே குழந்தையின் வகுப்பறை.

2. மிகையாக வளைப்பதால் வில் முறிந்து விடும். வளையாமலே இருந்தால் மனம் முறிந்து விடும்.

3. எண்ணம் ஒரு மலர்! மொழி அதன் மொட்டு! செயல் அதன் கனி!

4. நேர்மையே எதையும் விற்பனை செய்வதற்கான மிகப்பெரிய தகுதியாக உள்ளது.

5. மற்ற அனைத்து குணங்களைவிடவும் மிக முக்கியமானது, துணிவு.

6. உங்களுக்கும் கடவுளுக்கும் இடையேயான இரு வழி உரையாடலே பிரார்த்தனை.

7. பணம் ஒரு சிறந்த வேலைக்காரன், மோசமான எஜமானன்.

8. ஆசையும், கோபமும் மனிதனை பாவத்தில் தள்ளும் சக்தி படைத்தவையாக இருக்கின்றன.

9. எந்த விஷயத்திலும் அலட்சிய புத்தி கூடாது. அக்கறையுடன் செயல்படுவது அவசியம்.

10. அனைவரும் அன்றாடம் அரைமணி நேரமாவது மவுனமாக இருக்கப் பழகுவது அவசியம்.

11. குடும்பக் கடமையைச் சரிவர நிறைவேற்றாமல், பெருமைக்காக சமூக சேவையில் ஈடுபடுதல் கூடாது.

12. பேசுவதில் கணக்காக இருந்தால் குடும்பத்தில் சண்டை சச்சரவு வராது. நம் சக்தியும் வீணாகாமல் இருக்கும்.

13. கோபத்தால் பிறருக்கு மட்டுமில்லாமல் நமக்கும் தீமையே உண்டாகிறது.

14. நீங்கள் கற்றுக்கொள்ளும்போது, கற்பியுங்கள் நீங்கள் அடையும்போது, கொடுத்தளியுங்கள்.

# என் உயிரினும் மேலானவன் அவன்...! என் காதல் கதை!



காதல் என்பது எப்போது நினைத்தாலும் சுவாரசியத்தை தரும் ஒரு விஷயமாகும். காதலில் விழாதவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். காதல் எந்த நேரத்தில் வரும். எந்த சந்தர்ப்பத்தில் வரும் என்பது யாருக்குமே தெரியாத ஒன்றாகும். இந்த பகுதியில் ஒருவரது காதல் கதையை காணலாம்.

**பள்ளி பருவம்**

நான் அப்போது பன்னிரண்டாம் வகுப்பு படித்து கொண்டிருந்தேன். எனது குடும்பம் மிகவும் கண்டிப்பான குடும்பம். என்னை வெளியில் எங்கும் விட மாட்டார்கள். என்னை டியூசனுக்கு விட்டதே அபூர்வமான ஒரு விஷயம் தான். நான் மாலை வேளையில் டியூசன் செல்வேன். அப்போது ஒரு நாள் ஒருவரின் ஃ போனில் இருந்து எனக்கு பிடித்த பாடல் ஒலித்தது. அந்த பாடலை கேட்க எனக்கு மிகவும் பிடிக்கும். அப்போது எல்லாம் டவுன் லோடு செய்து பாடலை கேட்பது எல்லாம் எனக்கு தெரியாது. அந்த பாடல் அவனது போனில் ரிங்க் டோனாக ஒலித்ததும் நான் திரும்பி பார்த்தேன்...!

**காந்த பார்வை**

நம்மை யாரவது பார்த்தால் நாமும் எதர்ச்சையாக பார்ப்போம் இல்லையா.. அதே போல அவனும், எதற்காக அவள் என்னை இப்படி பார்க்கிறாள் என்பது போல் பார்த்தான். ஆனால் நான் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை... மீண்டும் ஒருமுறை நான் அவனை பேருந்தில் பார்த்தேன். அப்போதும் அந்த அமைதியான பேருந்தில் அவனது செல்போன் அந்த பாடலை ஒலித்தது.. நான் அவனை பார்த்தேன்.. அவனை நான் திரும்பி பார்த்தேன். அவனும் என்னை பார்த்து விட்டான். அய்யோ... என்று வெட்கப்பட்டு திரும்பினேன். எனது வெட்கம் பிடித்தது போல ஒரு சின்ன சிரிப்பை எனது ஓரப் பார்வையால் அவனிடம் கண்டேன்.

**ஏய் பாப்பா..!**

நான்ஒருஅழகானமாலைவேளையில் டியூசன் சென்ற போது. அவன் ஒரு டீ கடையில் ஓரமாக நின்று. ஏய் பாப்பா என்றுஅழைத்தான்...என்னைவீட்டில் பாப்பா என்று தான் கூப்பிடுவார்கள்... நான் சட்டென்று திரும்பி விட்டேன்.. ஆனால் அவன் அழைத்ததோ... ஒரு சின்ன பாப்பாவை தான்... எனது கிறுக்கு தனத்தையும் அவன் கண்டு விட்டானே என்று நான் கூச்சப்பட்டு ஓடி விட்டேன்... என் வாழ்க்கையில் முதல் முதலில் பரிச்சையமான ஒருவன் அதனால் இரவு முழுவதும் அவனது நினைவுகள்... கனவுகள்.. என்னை உறங்க விடாமல் துரத்தின...

**க்ரீட்டிங் கார்டு...**

பேருந்தில் எல்லாம் அவன் அமர்ந்து இருக்கும் இடத்தில் இருந்து பார்த்தால். நான் தெரிகின்ற மாதிரி நின்று கொள்வேன். பேருந்து கண்ணாடியில் பார்த்து அவன் முகம் பார்ப்பேன்.. இது தினமும் தொடர்ந்தது... ஒரு நாள் பேருந்தில் சரியான கூட்டம்.. அவன் அருகிலேயே நிற்கும் சூழ்நிலை உண்டாகிவிட்டது... அன்று தான் காதலர் தினமும் கூட.. அவன் எனது பையை கேட்டான். நானும் கொடுத்தேன். அன்று இரவு நான் எனது பையை திறந்த போது அதில் ஒரு க்ரீட்டிங் கார்டு இருந்தது. எனக்கு தூக்கி வாறி போட்டது... ஒரு பக்கம் சந்தோஷம் தான்.. ஆனாலும் வீட்டில் யாரவது பார்த்தால் என்ன செய்வது என்ற பயம் இருந்தது. அதுமட்டுமின்றி இந்த அனுபவம் புதிதும் கூட...

**காதல்...**

மறுநாள் நான் அந்த கார்டை கொண்டு சென்று அவனிடமேகொடுத்துவிட்டேன் கோபமாக.... அவன் அதை பிரித்து பார்த்து விட்டு சிரித்தான். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.. ஏனென்றால். நான் அதில் மீ டூ என்று எழுதி கொடுத்தேன்...

எங்களது காதல் தொடர்ந்தது... என்னை மிகவும் புரிந்தவன்.. அவனிடம் திருட்டு தனமாக பயந்து பயந்து நாழு வார்த்தை தான் பேச முடியும்.. பின்னர் அவனுக்கு வெளியூரில் வேலை கிடைத்தது. அவன் வெள்ளி கிழமை நாள் தான் ஒரு குறிப்பிட்ட பேருந்திற்கு வருவான்... நான் அவனிடம் மனம் விட்டு பேச அந்த நேரம் ஏதுவாக இருக்கும்... அது மிகவும் நெருக்கமான நேரம் என்பதால்.... அதிகம் பேசவில்லை அப்போது செல்போன் இல்லை.... தினமும் அவனிடம் பேசவில்லை... அவனை காண்பதே வெள்ளிக்கிழமைகளின் இரவுகளில் தான்... அந்த பேருந்தை பிடிக்க நான் விரைந்து வருவேன்.. அதில் எனக்கு ஒரு சந்தோஷம்.. ஒரு வாரம் அவனை காணவில்லை என்றால் கூட பெரும் தவிப்பு இருக்கும். அவனது ஊர் தெரியும்.. குடும்பம் பற்றி தெரியும். ஆனால் எதையும் நேரில் காணவில்லை.. அவன் சொல்வது உண்மையா என்று பரிசோதிக்கவும் தோனவில்லை....

**கல்யாணம்**

எனக்கு வார வாரம் ஏதேனும் பரிசை வாங்கி வருவான்... நான் அதை பார்த்து விட்டு அதனை அவனிடமே கொடுத்து விடுவேன். திருமணம் எல்லாம் எப்படி சாத்தியம் என கேட்டேன்... நான் பார்த்துகிறேன் என்றான்.. அதற்கு மேல் மறு வார்த்தை பேசவில்லை.. இதை பற்றி எல்லாம் எனது தோழிகளிடம் கூறினேன்.. அவர்கள் முட்டாள் தனமான காதல் என்றார்கள்.. பேசாமல்... பார்க்காமல் எப்படி என்றார்கள்.... ஆனால் சரியாக எட்டு வருடம் கழித்து அவன் என்னை திருமணம் செய்து கொண்ட போது... என் தோழிகளின் முகத்தில் ஈயாடவில்லை....!






# கனியும் காலம் விஞ்ஞானி கையில்!

தக்காளி எப்போது பழுக்க வேண்டும் என்பதை கட்டுப்படுத்தும் வித்தையை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். தக்காளியின் குறிப்பிட்ட ஒரு மரபணுவை திருத்துவதன் மூலம், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தினர் இதை சாதித்துள்ளனர்.

தக்காளி காயாக இருப்பது முதல், சதைப் பற்றுடன் மெல்லக் கனிந்து பழமாவது வரை பல தன்மைகளை தருவது, 'பிளாஸ்டிட்' என்றபுரதத்திற்கு பெரும் பங்கு உண்டு. இந்த ஒற்றை புரதத்தை கண்டுபிடித்ததன் மூலம், தக்காளி பழுக்கும் தன்மையை கட்டுப்படுத்தலாம்.

அதாவது, விரைவாக பழுக்கவோ அல்லது மெதுவாக கனியவோ செய்யலாம். இதனால், நிலத்தில் இருந்து கிளம்பி, பெட்டிகளில் அடுக்கப்பட்டு, கிடங்குக்கு போய், பிறகு கடைகளை அடைந்து, அங்கிருந்து வீடுகளிலுள்ள குளிர்சாதன பெட்டிகளை அடைகிறது தக்காளி. இந்த பயணத்தில், எப்போது அது கனிந்து பழமாக வேண்டும் என்பதை விஞ்ஞானிகளால் தீர்மானிக்க முடியும்.

உலகெங்கும் சமையலுக்கு மையமாக இருக்கும் தக்காளி கனியும் காலத்தை கட்டுப்படுத்த முடிந்தால், விளைந்த தக்காளி வீணாவதை தடுக்கலாம். மேலும், இதே நுட்பத்தை, பிற காய், கனிகளுக்கும் பயன்படுத்த முடியும் என ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் தாவர அறிவியல் துறை விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



# கொரோனா வைரஸ் காரணமாக ரோபோக்களுக்கு பட்டமளிப்பு விழா - சமூக விலகலை கடைபிடிக்கும் ஜப்பான்!

கொரோனா வைரஸ் தொற்று உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் நிலையில், ஜப்பானில் பட்டமளிப்பு விழாக்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. ஆனால், ஒரு பள்ளியில், மாணவர்கள் வீட்டில் இருந்தே ரோபோவை கட்டுபடுத்தி, சமூக விலகலை கடைபிடிக்கும் வகையில் தொலைதூரத்தில் இருந்து கலந்து கொண்டனர். டோக்கியோவில் உள்ள பிசினஸ் பிரேக்ரட் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விழாவில், 'நியூமி' என்ற 4 ரோபோக்கள் மட்டுமே பட்டமளிப்பு தொப்பிகள் மற்றும் அங்கிகளை அணிந்திருந்தன. அந்த ரோபோக்களின் "முகங்களில்" டேப்லெட் வைத்து, அதன் மூலம் 4 பட்டதாரிகளும் இணைந்திருந்தனர். இதனால் ரோபோக்களும் தொற்றுநோயிலிருந்து சமூக தூரத்தை பயிற்சி செய்ய முடியும்.

ரோபோக்கள் டிப்ளோமோ பட்டம் பெறுவதற்காக மேடைக்கு செல்லும் போது, பள்ளி ஊழியர்கள் கைதட்டி, "வாழ்த்துக்கள்!" தெரிவித்தனர். பல்கலைக்கழகத் தலைவர் கெனிச்சி ஓமே (**Ken ichi Ohmae**), சான்றிதழ்களை ரோபோவின் நடுப்பகுதியில் வைத்தார். இந்த ரோபோக்களை, மாணவர்கள் வீட்டில் இருந்து மடிக்கணினிகள் மூலம் கட்டுப்படுத்தினர். "ரோபோக்கள் மூலம் சான்றிதழ் பெறுவது உண்மையிலேயே ஒரு புதிய அனுபவம்" என்று கசுகி தமுரா (**Kazuki Ta mura**) முதுகலை பட்டப்படிப்பு டிப்ளோமா பெறும் போது கணினி வழியாக கூறினார். வைரஸ் தொற்றால், கூட்டங்களைத் தவிர்க்க மற்ற பள்ளிகளும் இந்த அணுகுமுறையை பின்பற்றும் என்று பல்கலைக்கழகம் நம்புகிறது.



# Google People Cards அறிமுகம்: இனி உங்கள் பெயரைத் தேடினாலே கூகுளில் கிடைத்துவிடுவீர்கள்!

கூகுள் நிறுவனம் புதிதாக **People Cards** என்ற அம்சத்தை அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் நீங்களும் உங்களை கூகுள் தேடலில் இடம்பெற வைக்கலாம். கூகுளில் நமது பெயரைத் தேடினால் வருமா என்று நம்மில் நிறைய பேர் பார்த்திருப்பார்கள். ஆனால், மாறாக அந்த பெயரில் உள்ள பிரபலங்கள் மட்டுமே கிடைப்பார்கள். இந்த நிலைமை தற்போது மாறியுள்ளது. இனி உங்கள் பெயரையும் கூகுளில் இடம்பெற வைக்க முடியும். இதற்காகவே கூகுளில் **People Cards** என்ற தேடுதல் அம்சம் கொண்டு வரப்பட்டுள்ளது. இது கடந்த இரண்டு ஆண்டுகளாக சோதனை செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இப்போதைக்கு மொபைல் பயனர்கள் மட்டுமே கூகுள் பிபுள் கார்டு உருவாக்க முடியும். இதற்கு ஜிமெயில் கணக்கும், மொபைல் நம்பரும் தேவைப்படும். இதன் மூலம் நீங்கள் உங்களுக்கென ஒரு பிபுள் கார்டை தொடங்கலாம். கூகுள் தேடுபொறியில் முதல் இடத்தில் இந்த பிபுள் கார்டு இடம் பெறும். அதில், பயனரின் பெயர், சமூகவலைதள பக்கங்கள் உள்ளிட்ட விவரங்கள் காணக்கிடைக்கும்.

உதாரணத்திற்கு நீங்கள் பிபுள் கார்டை பதிவு செய்து விட்டீர்கள் என்றால், உங்கள் பெயரை கூகுளில் தேடினால், கூகுளின் முதல் பக்கத்திலேயே நீங்கள் வருவீர்கள். அதில் உங்கள் புகைப்படம், மின்னஞ்சல் முகவரி, மொபைல் நம்பர், உங்களது ஃபேஸ்புக், டுவிட்டர், இன்ஸ்டாகிராம் போன்ற சமூகவலைதள பக்கங்களின் முகவரிகள் இருக்கும்.


இவற்றில் எது தெரிய வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ அதை மட்டுமே காட்சிப்படுத்தலாம். உங்கள் மொபைல் எண் தெரியக்கூடாது என்று நினைத்தால், செட்டிங்ஸ் சென்று அதை ஆஃப் செய்து கொள்ளலாம். முதற்கட்டமாக ஆங்கிலத்தில் மட்டுமே கூகுள் பிபுள் கார்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. விரைவில் மற்ற மொழிகளில் வரவுள்ளதாக கூறப்படுகிறது.

கூகுள் பிபுள் கார்டை பதிவு செய்வது எப்படி?
1. உங்களுக்கென சொந்தமாக கூகுள் பிபுள் கார்டு பதிவு செய்வதற்கு, உங்கள் மொபைல் மூலமாக கூகுளில் உள்நுழைய வேண்டும்.
2. அதில் '**add me to search**' என்ற ஆப்ஷன் இருக்கும்.
3. பின்பு **'Add yourself to Google Search'** என்பதைத் தேர்வு செய்யவும்.
4. இப்போது உங்கள் மொபைல் நம்பரை எண்டர் செய்து, ஓடிபி (**OTP**) உறுதிசெய்யவும்.

கூகுள் தரப்பில் ஒரு படிவம் கிடைக்கும். அதில் உங்களைப் பற்றிய விவரங்களை சுருக்கமாக டைப் செய்யவும். நீங்கள் என்ன வேலை பார்க்கிறீர்கள், என்ன படித்துள்ளீர்கள், உங்களது சமூக வலைதள பக்கங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**ஒரு தொழில்நுட்பம் வெற்றிஅடைவதற்கு, விளம்பரத்தைவிட, அது நடைமுறை சார்ந்ததாக இருப்பதே முக்கியம்.**

**ரிச்சர்ட் பெயின்மேன்**
**அமெரிக்க விஞ்ஞானி**






## இரண்டாவது ஒருநாள் போட்டி நெதர்லாந்துக்கு அயர்லாந்து பதிலடி!

நெதர்லாந்து அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில், அயர்லாந்து அணி 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 1-1 என்ற கணக்கில் அயர்லாந்து அணி சமநிலைப் படுத்தியுள்ளது.

உட்ரெக்ட் மைதானத்தில் அன்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நெதர்லாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 49.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 157 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மேக்ஸ் ஓடவுட் 36 ஓட்டங்களையும் ஸ்கொட் எட்வட்ஸ் மற்றும் லீட் ஆகியோர் தலா 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். அயர்லாந்து அணியின் பந்துவீச்சில், கிரைஜ் யங் மற்றும் ஜோசுவா லிட்டில் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளையும் பெர்ரி மெக்கார்தி மற்றும் என்டி மெக்பிரையன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 158 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய அயர்லாந்து அணி, 43 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் அந்த அணி 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது. இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஹென்றிவ் பல்ப்பிரையன் ஆட்டமிழக்காது 63 ஓட்டங்களையும் போல் ஸ்டெயர்லிங் 52 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நெதர்லாந்து அணியின் பந்துவீச்சில், லோகன் வேன் பீக் மற்றும் பீட்டர் சீலார் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக பந்துவீச்சில் 4 விக்கெட்டுகளை வீழ்த்திய ஜோசுவா லிட்டில் தெரிவுசெய்யப்பட்டார். இரு அணிகளுக்கிடையிலான இந்த தொடரின் வெற்றியாளரை தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி 7ஆம் திகதி உட்ரெக்ட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.



## ஒத்திவைக்கப்பட்ட பாகிஸ்தான் சுப்பர் லீக் ரி-20 தொடர் மீண்டும் நடைபெறும் திகதி அறிவிப்பு!

ஒத்திவைக்கப்பட்ட ஆறாவது பாகிஸ்தான் சுப்பர் லீக் ரி-20 தொடர். மீண்டும் நடைபெறுவது உறுதியாகியிருந்த நிலையில் இத்தொடர் ஆரம்பமாகும் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி. இத்தொடர் எதிர்வரும் ஜூன் 9ஆம் முதல் ஜூன் 24ஆம் வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஒரே நாளில் இரு போட்டிகள் என ஆறு நாட்களுக்கு நடைபெறவுள்ளன. அபுதாபி நேரப்படி முதல் போட்டி மாலை 5 மணிக்குத் ஆரம்பமாகும். பாகிஸ்தான் நேரப்படி மாலை 6 மணிக்கு முதல் போட்டியும் அடுத்த போட்டி இரவு 11 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளன. அபுதாபியில் வெயில் அதிகமாக இருக்கும் என்பதால் இரு போட்டிகள் உள்ள நாட்களில் முதல் போட்டி மாலை 5 மணிக்குத் ஆரம்பமாகிறது.

இதனால் இதனால் பாகிஸ்தான் நேரப்படி இரவு 11 மணிக்குத் தொடங்க வேண்டியுள்ளது. எனினும் ஒரே போட்டி நடைபெறும் நாட்களில் பாகிஸ்தான் நேரப்படி 9 மணிக்கு அந்த போட்டி ஆரம்பமாகும். இரவு 11 மணிக்கு போட்டி ஆரம்பமானால் முழு போட்டியையும் எப்படிப் பார்த்து முடிப்பது என இரசிகர்கள் பலரும் சமூகவலைத்தளங்களில் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

இதேவேளை. தொடரை நடத்துவதற்கு கொரோனா தொடர்பான நடைமுறையில் உள்ள சிலவற்றிற்கு விலக்கு அளித்துள்ள நிலையில். ஐக்கிய அரபு அமீரகம் வரும் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது

ஆறாவது பாகிஸ்தான் சுப்பர் லீக் ரி-20 தொடரில் பங்கேற்ற ஏழு பேர் கொரோனா வைரஸ ால் பாதிக்கப்பட்டதால். கடந்த மார்ச் 4ஆம் திகதி தொடரை ஒத்திவைக்க முடிவெடுக்கப்பட்டது. இதன்போது 34 போட்டிகளில் 14 போட்டிகள் முடிவடைந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. அனைத்து போட்டிகளும் கராச்சி மற்றும் லாகூரில் நடைபெற இருந்தன. முதல் 20 போட்டிகள் கராச்சியிலும் மீதமுள்ள 10 லீக் போட்டிகளும் நான்கு பிளே ஒஃப் போட்டிகளும் லாகூரில் நடைபெற இருந்தன.

கொரோனா பாதுகாப்பு வளையத்தில் அணியின் வீரர்களும் பயிற்சியாளர்களும் இருந்தபோதும் ஏழு பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டார்கள். இதில் ஆறு பேர் வீரர்கள். இதனால் தொடர் ஒத்திவைக்கப்பட்டது. இந்தநிலையில். மீதமுள்ள 20 போட்டிகளையும் நடத்தி முடிப்பதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முன்னெடுத்த முயற்சி வெற்றியளித்துள்ளது.

## இங்கிலாந்து - மேற்கிந்திய தீவுகள் தொடர்களுக்கான பாகிஸ்தான் அணி விபரம் அறிவிப்பு!

இங்கிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணிகளுக்கெதிரான தொடர்களில் விளையாடும் எதிர்பார்ப்பு மிக்க பாகிஸ்தான் அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் வேகபந்து வீச்சாளர்களான மொஹமட் அப்பாஸ் மற்றும் நஷிம் ஷா ஆகியோர் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் தொடருக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.



மேலும், முன்னாள் வீரரான மொய்ன் கானின் மகனும், பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் குவெட்டா கிளேடியேட்டர்ஸ் அணிக்காக விளையாடும் அசாம் கான் இங்கிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணிகளுக்கெதிரான ரி-20 தொடர்களில் மூலம் சர்வதேச அறிமுகத்தை பெறுகிறார்.

அதேபோல, துடுப்பாட்ட சகலதுறை வீரரான இமாட் வசிம் ரி-20 தொடருக்கு மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்.

சரி தற்போது முதலாவதாக ஒருநாள் அணியின் விபரத்தை பார்க்கலாம்.
பாபர் அசாம் தலைமையிலான அணியில், சதாப் கான், அப்துல்லா ஷா∴பிக், பஹீம் அஷ்ரப், ∴பக்கர் ஸமான், ஹெய்டர் அலி, ஹரிஸ் ரவூப், ஹரிஸ் சோஹைல், ஹசன் அலி, இமாம்-உல்-ஹக், முகமது ஹஸ்னைன், முகமது நவாஸ், முகமது ரிஸ்வான், சல்மான் அலி ஆகா, சர்பராஸ் அகமது, சவுத் ஷகீல், ஷாஹீன் ஷா அப்ரிடி மற்றும் உஸ்மான் காதிர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

பாபர் அசாம் தலைமையிலான ரி-20 அணியில், சதாப் கான், அர்ஷத் இக்பால், அசாம் கான், பஹீம் அஷ்ரப், ∴பக்கர் ஸமான், ஹெய்டர் அலி, ஹரிஸ் ரவூப், ஹசன் அலி, இமாத் வாசிம், முகமது ஹபீஸ், முகமது ஹஸ்னைன், முகமது நவாஸ், முகமது ரிஸ்வான், முகமது வாசிம், சர்பராஸ் அகமது, ஷாஹீன் ஷா அப்ரிடி, ஷர்ஜீல் கான் மற்றும் உஸ்மான் காதிர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

பாபர் அசாம் தலைமையிலான டெஸ்ட் அணியில், முகமது ரிஸ்வான், அப்துல்லா ஷா∴பிக், அபிட் அலி, அசார் அலி, பஹீம் அஷ்ரப், ∴பவாட் அலாம், ஹரிஸ் ரவூப், ஹசன் அலி, இம்ரான் பட், முகமது அப்பாஸ், முகமது நவாஸ், நசீம் ஷா, நயுமான் அலி, சஜித் கான், சர்பராஸ் அகமது, சவுட் ஷாகீல், ஷாஹீன் ஷா அப்ரிடி, ஷாநவாஸ் தாஹனி, யாசிர் ஷா மற்றும் ஷாயித் மஹ்மூத் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

எதிர்வரும் ஜூலை மாத ஆரம்பத்தில் இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் பாகிஸ்தான் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் ரி-20 தொடர்களில் விளையாடுகின்றது.


இதனைத்தொடர்ந்து ஜூலை மாத இறுதியில் மேற்கிந்திய தீவுகளுக்கு சென்று ஐந்து போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் மற்றும் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

## கொரோனா அச்சம்: 10 ஆயிரம் ஒலிம்பிக் தன்னார்வலர்கள் விலகல்

கடுமையான சுகாதார நெறிமுறைகளை பின்பற்றி பாதுகாப்புடன் விளையாட்டுகளை நடத்துவதாக ஒலிம்பிக் அமைப்பாளர்களும் சர்வதேச ஒலிம்பிக் சங்கமும் உறுதியளித்துள்ளன. கொரோனா பெருந்தொற்றால் ஏற்பட்டுள்ள கடுமையான நெருக்கடிக்கு மத்தியில் ஜப்பானில் வரும் ஜூலை 23ம் திகதி ஒலிம்பிக் போட்டிகள் தொடங்க உள்ளன. இதற்கான ஆயத்தப் பணிகள் முழுவீச்சில் நடைபெறுகின்றன.

இந்நிலையில். ஒலிம்பிக் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்க உதவும் பணியில் ஈடுபட்டுள்ள 10000 தன்னார்வலர்கள் விலகி உள்ளனர். அவர்கள் விலகியதற்கு கொரோனா தொற்று பரவலாம் என்ற அச்சமும் ஒரு காரணமாக இருக்கலாம் என போட்டி அமைப்பாளர்கள் கூறுகின்றனர். கடுமையான சுகாதார நெறிமுறைகளை பின்பற்றி பாதுகாப்புடன் விளையாட்டுகளை நடத்துவதாக ஒலிம்பிக் போட்டி அமைப்பாளர்களும் சர்வதேச ஒலிம்பிக் சங்கம் உறுதியளித்துள்ளன.

எனினும். பாதுகாப்பு குறித்த சந்தேகங்களும் கவலைகளும் ஏற்படுகின்றன. தன்னார்வலர்களுக்கு கொரோனா பரிசோதனை செய்யப்படுமா என்று தெரியவில்லை. கடந்த ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெறவிருந்த நிலையில். ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டதும். பல தன்னார்வலர்கள் விலகியதற்கு மற்றொரு காரணம் என அமைப்பாளர்கள் கூறுகின்றனர்.






## பேரழிவை ஏற்படுத்திய சீனா உலகநாடுகளுக்கு 10 டிரில்லியன் டொலர்கள் வழங்க வேண்டும்: ட்ரம்ப்!

கொரோனா வைரஸை உலகுக்கு ஏற்படுத்தி பேரழிவை ஏற்படுத்திய சீனா உலகநாடுகளுக்கு 10 டிரில்லியன் டொலர்கள் வழங்க வேண்டும் என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். மனித அழிவுகளை ஏற்படுத்திவரும் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றின் தோற்றம் எங்கே என்பதைக் கண்டறிய, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்டுள்ள அறிவிப்பின் பின்னணியில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.



இது தொடர்பாக டொனால்ட் ட்ரம்ப் கூறுகையில், 'சீன வைரஸ் வூஹான் ஆய்வகத்தில் இருந்தே பரவியது என ட்ரம்ப் கூறியது சரியே என தற்போது அனைத்து தரப்பினரும் குறிப்பாக எதிரி என்று சொல்லப்படுபவர்களும் கூறத்தொடங்கியுள்ளனர். கொரோனா வைரஸ் மூலம் உலகுக்கு ஏற்படுத்திய பேரழிவுக்காக அமெரிக்கா மற்றும் பிற உலக நாடுகளுக்கு சீனா 10 டிரில்லியன் டொலர்கள் வழங்க வேண்டும்' என கூறியுள்ளார். வூஹானில் உள்ள ஒரு ஆய்வகத்தில் இருந்தே வைரஸ் பரவியதற்கான ஆதாரங்கள் வலுவடைந்து வருவதாக கூறப்படுகிறது. ஆனால், இதனை சீனா மறுத்துள்ளது.

## ராணி எலிசபெத்- அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கிடையில் அடுத்த வாரம் சந்திப்பு!

அடுத்த வாரம் பிரித்தானியாவில் நடைபெறும் ஜி7 உச்சிமாநாட்டின் முடிவில் ராணி எலிசபெத், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் முதல் பெண்மணி ஜில் பைடனை தனது விண்ட்சர் கோட்டை வீட்டில் சந்திப்பார் என்று பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது. இதன்படி, ராணி எலிசபெத், ஜோ பைடனை விண்ட்சர் கோட்டைக்கு ஜூன் 13ஆம் திகதி முதல் சந்திப்பிற்காக வரவேற்பார். அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின் ஜோ பைடன் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டு பயணம் மற்றும் பிரித்தானியாவுக்கான பயணம் இதுவாகும். ராணி, தனது ஆட்சிக் காலத்தில், 95 வயதான மன்னர் லிண்டன் ஜோன்சனைத் தவிர ஒவ்வொரு அமெரிக்க ஜனாதிபதியையும் சந்தித்துள்ளார்.



95 வயதான ராணி தனது சாதனை படைத்த ஆட்சியின் போது சந்திக்கும் 13ஆவது அமெரிக்க ஜனாதிபதியாக பைடன் இருப்பார். ஏப்ரல் மாதம் தனது கணவர் இளவரசர் பிலிப் இறந்ததிலிருந்து ஒரு உலகத் தலைவருடனான ராணியின் முதல் பெரிய சந்திப்பாக இது இருக்கும். மேலும் ஒரு வருடத்திற்குப் பிறகு, கொரோனா வைரஸ் தொற்றுநோயால் அவரது பெரும்பாலான தனிப்பட்ட ஈடுபாடுகள் நிறுத்தப்பட்டன. சமீபத்திய ஆண்டுகளில், அவர் தனது சர்வதேச பயணத்தை குறைத்துள்ளார். உலகத் தலைவர்களுடனான வருகைகள் குறைவாகவே உள்ளன. ஜி-7 உச்சி மா நாடு பிரித்தானியாவில் எதிர்வரும் 11ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இம்மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், அவுஸ்ரேலிய பிரதமர் ஸ்கொட் மோரி சன், ஜேர்மனி அதிபர் ஏஞ்சலா மெர்கல் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

### ஈரானின் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் தீ விபத்து போர்க்கப்பலும் தீப்பிடித்து கடலில் மூழ்கியது

ஈரான் தலைநகர் டெஹ்ரானிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ஏற்பட்ட தீவிபத்தால், அந்த ஆலை தொடர்ந்து எரிந்து வருகிறது. தெற்கு டெஹ்ரானில் உள்ள ஈரான் அரசுக்கு சொந்தமான டான்கூயன் பெட்ரோகெமிக்கல்ஸ் நிறுவனத்தின் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் புதன்கிழமை (02) திடீர் தீவிபத்து ஏற்பட்டது.

தீயைக் கட்டுப்படுத்த தீயணைப்பு வீரர்கள் கடுமையாக முயன்றும் இரண்டாவது நாளாக அந்த ஆலையில் தீ கொளுந்துவிட்டு எரிந்தது. இதன் காரணமாக, டெஹ்ரான் வானில் கரும்புகை சூழ்ந்தது. சுத்திகரிப்பு ஆலையிலுள்ள இரண்டு கழிவுத் தொட்டிகளில் கசிவு ஏற்பட்டதன் விளைவாக தீவிபத்து ஏற்பட்டுள்ளது என எண்ணெய் வளத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. எனினும், அந்தக் கசிவு எவ்வாறு ஏற்பட்டது என்ற விபரத்தை அதிகாரிகள் வெளியிடவில்லை.

ஈரானின் மிகப்பெரிய போர்க் கப்பல் ஓமன் வளைகுடாவில் மர்மமான முறையில் எரிந்து புதன்கிழமை மூழ்கிய நிலையில், அந்த நாட்டின் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலும் ஏற்பட்டுள்ள தீவிபத்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஈரான் கடற்படைக்கு சொந்தமான கார்க் என்ற கப்பலில் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு தீப்பிடித்தது.

207 மீட்டர் நீளம் கொண்ட அந்தக் கப்பல்தான் ஈரானின் மிகப்பெரிய போர்க் கப்பலாகும். அந்தப் பிராந்தியத்தில் நிறுத்தப்பட்டுள்ள பிற கப்பல்களுக்குத் தேவையான பொருட்களை விநியோகிக்கும் பணியில் கார்க் கப்பல் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

கடந்த 2019-ஆம் ஆண்டு முதல் ஓமன் வளைகுடா பகுதியில் சரக்குக் கப்பல்களில் மர்மமான முறையில் வெடி விபத்துகள் ஏற்பட்டதற்கு ஈரானின் சதிச் செயல்தான் காரணம் என்று அமெரிக்கா குற்றம்சாட்டியது.

இதனை ஈரான் மறுத்தாலும், அந்த நாட்டின் எம்.வி. சாவிஸ் கப்பலைக் குறிவைத்து மர்மத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. இந்தத் தாக்குதலை இஸ்ரேல் நடத்தியிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

இந்த விவகாரத்தில் இரு தரப்பினருக்கும் இடையே பதற்றம் நிலவி வரும் சூழலில், ஈரானின் மிகப் பெரிய போர்க் கப்பல் மர்மமான முறையில் தீப்பிடித்து மூழ்கியுள்ளதுடன் தற்போது அந்த நாட்டு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலும் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

## கொங்கோவில் இடம்பெயர்வு முகாம்களில் தங்கியிருந்த பொதுமக்கள் மீது துப்பாக்கி சூடு: 57பேர் உயிரிழப்பு!

கிழக்கு ஜனநாயக கொங்கோ குடியரசில் (டி.ஆர்.சி), ஏ.டி.எஃப். கிளர்ச்சிப்படை நடத்திய தாக்குதலில், 57 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. கிழக்கு இடூரி மாகாணத்தில் கடந்த 31ஆம் திகதி இடம்பெயர்வு முகாம்களில் இந்த கொடூர தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் அண்டை நாடான உகாண்டாவிலிருந்து வெளியேற்றப்பட்ட, நேச நாட்டு ஜனநாயகப் படைகளின் (ஏ.டி.எஃப்) குழுவின் போராளிகள் இந்த தாக்குதலை நடத்தியுள்ளது.



இந்த தாக்குதல், கிழக்கு இடூரி மாகாணத்தில் பல இடப்பெயர்வு இடங்களை விட்டு வெளியேற 5,800 பேரை கட்டாயப்படுத்தியதாக ஐ.நா. அகதிகள் அமைப்பான யு.என்.எச்.சி.ஆர் தெரிவித்துள்ளது. ஒரே நேரத்தில் போகா மற்றும் த்சாபி நகரங்களுக்கு அருகிலுள்ள இடம்பெயர்வு முகாம்கள் மற்றும் கிராமங்களில் புகுந்து ஏ.டி.எஃப். கிளர்ச்சிப்படை நடத்திய துப்பாக்கி சூட்டில், ஏழு குழந்தைகள் உட்பட 57 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என யுஎன்ஹெச்சிஆர் செய்தித் தொடர்பாளர் பாபர் பலோச் ஜெனீவாவில் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், 'இந்த தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளனர் மற்றும் 25 பேர் கடத்தப்பட்டனர். அதே நேரத்தில் 70க்கும் மேற்பட்ட தங்குமிடங்கள் மற்றும் கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. போகா நகரில் மட்டும் 31 பெண்கள், குழந்தைகள் மற்றும் ஆண்கள் கொல்லப்பட்டனர்' என கூறினார்.

## பழங்குடி குழந்தைகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவர கனேடிய பிரதமருக்கு அழைப்பு!

பழங்குடி குழந்தைகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவர பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு என்டிபி தலைவர் ஜக்மீத் சிங் அழைப்பு விடுத்துள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள ஒரு முன்னாள் குடியிருப்புப் பாடசாலையில் பழங்குடி குழந்தைகளின் வெகுஜன கல்லறை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, குழந்தைகள் நல அமைப்பால் பிரிக்கப்பட்ட பழங்குடி குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு பில்லியன் கணக்கான டொலர்களை செலுத்த உத்தரவிட்ட கனேடிய மனித உரிமைகள் தீர்ப்பாயத்தின் தீர்ப்பை எதிர்த்து அவரது வழக்கறிஞர்கள் மேல்முறையீடு செய்துள்ள நிலையில், ஜக்மீத் சிங் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், 'ஒரு முன்னாள் குடியிருப்புப் பாடசாலையில் 215 பழங்குடி குழந்தைகளின் கண்டுபிடிப்பு தேசத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இது கனடாவின் இனப்படுகொலை நடவடிக்கைகளுக்கு தெளிவான சான்றின் மற்றொரு எடுத்துக்காட்டு. ஆனால், இது இரங்கலுக்கு அப்பால் தெளிவான நடவடிக்கைக்கு நாம் செல்ல வேண்டிய தருணம்.

பிரதமரிடம் நேரடியாக எனது கேள்வி என்னவென்றால், அவர் தனது வழக்கறிஞர்களை அழைப்பாரா? நீதிமன்றத்தில் பழங்குடி குழந்தைகளுடன் போராடுவதை அவர் நிறுத்துவாரா? என கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் பிரதமர் ட்ரூடோ இந்த கேள்விக்கு நேரடியாக பதிலளிக்கவில்லை. அதற்குப் பதிலாக குடியிருப்பு பாடசாலைகளில் தப்பிப்பிழைத்த ஒவ்வொருவரும் இழப்பீடு பெறத் தகுதியானவர்கள் என்றும், அவர்கள் ஆதரவைப் பெறச் சமூகங்கள், குடும்பங்கள் மற்றும் பழங்குடித் தலைவர்களுடன் தனது அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் பிரதமர் கூறினார்.

### அவுஸ்திரேலியாவிலுள்ள புகலிடக் கோரிக்கையாளர்களை நியூஸிலாந்தில் குடியேற்றுவது தொடர்பில் பேச்சுவார்த்தை

அவுஸ்திரேலிய கடற்கரையோரப் பகுதிகளில் வாழும் புகலிடக் கோரிக்கையாளர்களை நியூஸிலாந்தில் குடியேற்றுவது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாவுறு மற்றும் பப்புவா நியூகினியாவிலுள்ளவர்கள் தொடர்பிலும் கரிசனை செலுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு இலங்கையர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான புகலிடக் கோரிக்கையாளர்கள் தற்போது உள்ளனர். அவுஸ்திரேலியாவிலுள்ள புகலிடக் கோரிக்கையாளர்களை நியூஸி லாந்தில் குடியேற்றுவது தொடர்பிலான பேச்சுவார்த்தையை இரு நாட்டு அரசாங்கங்களும் முன்னெடுத்து வருவதாக **The Guardian** செய்தி வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலிய கரையோரப் பகுதிகளிலுள்ள 150 புகலிடக் கோரிக்கையாளர்களை நியூஸி லாந்தில் குடியேற்றுவதற்கு தமது நாடு தயார் என நியூஸிலாந்தின் குடிவரவு அமைச்சர் **Kris Faafoi** உறுதிப்படுத்தியுள்ளார். இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் பேச்சுவார்த்தைகளின் போது கவனம் செலுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாவுறு தீவில் 105 புகலிடக் கோரிக்கையாளர்களும் பப்புவா நியூகினியாவில் 130 புகலிடக் கோரிக்கையாளர்களும் தற்போது உள்ளனர். இவர்கள் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்படாத போதிலும், தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு வருவதுடன், அங்கு கடுமையான கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன.

# வீட்டில் தனிமைப்படுத்தல் / சுய தனிமைப்படுத்தல்



## வீட்டில் தனிமைப்படுத்தல் அல்லது சுய தனிமைப்படுத்தல் என்றால் என்ன?

"H"வீட்டில் தனிமைப்படுத்தல்" என்பது சுகாதார அமைப்பு அல்லாத இடத்தில் ஆரோக்கியத்தை பேணுவதோடு, அதிக ஆபத்துள்ள தொடர்புகளைத் தவிர்த்து வைத்திருப்பதைக் குறிக்கிறது..

யார் வீட்டில் தனிமைப்படுத்தப்பட அல்லது சுய தனிமைப்படுத்தப்பட வேண்டியவர்கள்?

கடந்த 14 நாட்களில் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு திரும்பிய ஒருவர் அல்லது கடந்த 14 நாட்களில் COVID-19 இன் சந்தேகத்திற்கிடமான அல்லது கண்டறியப்பட்டவர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்த ஒருவர்

## வீட்டு தனிமைப்படுத்தல் அல்லது சுய தனிமைப்படுத்தலில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

முடிந்தால் உங்களுக்காக ஒரு தனி அறை ஒதுக்க வேண்டும்.
உங்களுக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் இடையில் குறைந்தபட்சம் ஒரு மீட்டர் தூரத்தை பராமரிக்கவும்
முடிந்தால் தனி குளியலறையைப் பயன்படுத்துங்கள். நீங்கள் ஒரு குளியலறையைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமானால், நீங்கள் கதவு, குழாய் போன்றவற்றை சோப்பு மற்றும் தண்ணீரில் கழுவ வேண்டும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்
பார்வையாளர்கள் வருவதை ஊக்குவிக்க வேண்டாம்.
நீங்களும், வீட்டிலுள்ள மற்றவர்களும் அடிக்கடி கைகளை கழுவ வேண்டும் (குறைந்தது 20 விநாடிகளுக்கு)
தட்டுகள், கப், கண்ணாடி, துண்டுகள் மற்றும் பெட்ஷீட்களைப் பகிர வேண்டாம். சோப்பு மற்றும் தண்ணீரில் தனித்தனியாக கழுவவும்.
தும்மும்போது அல்லது இருமும்போது எப்போதும் உங்கள் வாயை ஒரு திசு அல்லது முழங்கையின் உட்புறத்தால் மூடி வைக்கவும்.
பயன்படுத்தப்பட்ட திசுக்களை ஒரு மூடக்கூடிய குப்பை தொட்டியில் பாதுகாப்பாக அப்புறப்படுத்துங்கள்
தும்மும்போது அல்லது இருமும்போது எப்போதும் உங்கள் வாயை ஒரு திசு அல்லது முழங்கையின் உட்புறத்தால் மூடி வைக்கவும்.
பயன்படுத்தப்பட்ட திசுக்களை ஒரு மூடக்கூடிய குப்பை தொட்டியில் பாதுகாப்பாக அப்புறப்படுத்துங்கள்
கழுவப்படாத கைகளால் கண்கள், மூக்கு மற்றும் வாயைத் தொடுவதைத் தவிர்க்கவும்
உங்கள் உடல் வெப்பநிலையை ஒரு நாளைக்கு இரண்டு முறையாவது அளவிடுவதன் மூலம் கண்காணிக்கவும்
காய்ச்சல், இருமல், தொண்டை வலி, உடல் வலி, சுவாசிப்பதில் சிரமம் மற்றும் காய்ச்சல் போன்ற அறிகுறிகளை நீங்கள் அடையாளம் கண்டால் உடனடியாக பொது சுகாதார ஆய்வாளர் மற்றும் அல்லது மருத்துவ அதிகாரியிடம் அறிவிக்கவும்.

***Contact the Suwaseriya Ambulance service through 1990 to arrange transport to the nearest designated hospital.***

ஆதாரம் - தொற்றுநோயியல் பிரிவு ட/ சுகாதார அமைச்சு

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 06.06.2021 அன்று வெளியிடப்பட்டது.